# ஏழு எக்காளங்களின் வெளிப்பாடு

## பகுதி 3

**(The Revelation of The Seven Trumpets – Part 3)**

பிப்ரவரி **21, 2016,** கல்வாரி சபை, சென்னை

**(February 21, 2016, Calvary Tabernacle, Chennai)**

போதகர் **A.** சாமுவேல்

**(Pastor A. Samuel)**

மகா பரிசுத்தமும் இரக்கமும் உள்ள நல்ல ஆண்டவரே, உம்மைத் துதிக்கிறோம். இந்த அருமையான காலை வேளையிலே உமக்கு ஆராதனை செய்யத்தக்கதாக உம்முடைய சமுகத்திலே எங்களைக் கூட்டிசேர்த்ததற்காக உமக்கு ஸ்தோத்திரம். உலகம் தரக்கூடாத சமாதானத்தையும் சந்தோஷத்தையும் தந்திருக்கிறீர். பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தைத் தந்திருக்கிறீர். நித்தியஜீவனைத் தந்திருக்கிறீர். வெளிப்பாட்டை நீர் கொடுத்திருக்கிறீர். நாங்கள் எங்கேயிருந்து வந்தோம், எதற்காக இந்த உலகத்தில் இருக்கிறோம், எங்கே போகிறோம் என்ற அறிவை **(Knowledge)** நீர் கொடுத்திருப்பதற்காக ஸ்தோத்திரம்.

கடைசி காலத்திலே ஒரு தீர்க்கதரிசியின் மூலமாக ஏழு முத்திரைகளைத் திறந்து, தேவரகசியத்தை வெளிப்படுத்தியிருக்கிறீர். இவ்விதமான ஒரு காலத்திலே நாங்கள் வாழும்படியாக எங்களை பூமியிலே நீர் கொண்டுவந்ததற்காக உமக்கு ஸ்தோத்திரம் செலுத்துகிறோம். இந்த தமிழ்நாட்டிலே, சென்னை பட்டணத்திலே, இந்த வளசரவாக்கத்திலே எங்களை நீர் கொண்டுவந்து, உம்முடைய வார்த்தையை நீர் வெளிப்படுத்துவதற்காக உமக்கு ஸ்தோத்திரம். எங்களுக்குக் கொடுத்த சபைக்காக உமக்கு ஸ்தோத்திரம். நாங்கள் நிலைத்து நின்று கனிகொடுக்கத்தக்கதாக நீர் கிருபை தாரும். இந்த இடத்திலே இருந்து நாங்கள் எங்களை ஆயத்தப்படுத்திக்கொண்டு, மேலே போகத்தக்கதாக நீர் எங்களை ஆசீர்வதியும்.

நாங்கள் நிர்மூலமாகாமல் இருப்பது உம்முடைய கிருபையாய் இருக்கிறது. எத்தனையோ பேர் இந்த நாளைக் காணமுடியவில்லை. ஆனால் எங்களுக்கு ஜீவனைக் கொடுத்திருப்பது உம்முடைய கிருபையாய் இருக்கிறது. **"நான் இருக்கிறது தேவகிருபையினாலே இருக்கிறேன்"** என்று பவுல் சொன்னவண்ணமாக, அந்த கிருபைக்காக உமக்கு ஸ்தோத்திரம். ஆண்டவரே, எத்தனையோ பேர் சத்தியத்திலே இங்கே இருக்கமுடியவில்லை. பரிசுத்த ஸ்தலத்திற்கு போக்குவரத்து செய்தார்கள். பின்பு அப்படியே போய்விட்டார்கள். கர்த்தாவே **"முடிவுபரியந்தம் நிலைநிற்பவனே இரட்சிக்கப்படுவான்"** என்று சொன்னவண்ணமாக, இந்த விசுவாசத்திலே, சத்தியத்திலே, இவ்வளவு காலம் எங்களை நிலைநிறுத்தியிருப்பதற்காக உமக்கு ஸ்தோத்திரம். முடிவுபரியந்தம் நிலைத்துநின்று நாங்கள் எடுத்துக்கொள்ளப்படுதலில் பங்குபெற எங்களை ஆயத்தப்படுத்துவீராக. எங்களுக்குக் கொடுத்த அந்த வாக்குத்தத்தமான

வார்த்தை **(Promised Word)** எங்கள் வாழ்க்கையிலே நிறைவேறத்தக்கதாக இயேசுவே நீர் கிருபை தாரும்.

நாங்கள் இங்கே வரும்போதெல்லாம் நீர் வார்த்தையை வெளிப்படுத்துகிறீர். நாங்கள் இப்பொழுது ஏழாம் முத்திரையின் காலத்திலே இருக்கிறோம். அது கர்த்தருடைய வருகையாய் இருக்கிறது **(It is the Coming of the Lord)**. இப்பொழுது நீர் வார்த்தையை வெளிப்படுத்திக்கொண்டிருக்கிறீர். ஒரு கூட்டமான மக்களை வார்த்தையைச் சுற்றிலும் ஐக்கியப்படும்படியாகச் செய்கிறீர். **"பிணம் எங்கேயோ அங்கே கழுகுகள் வந்து கூடும்"** என்ற உம்முடைய வார்த்தையின்படி, இங்கே புதிய மாமிசம் **(Fresh Meat)** இருக்கிறது, கழுகுகள் கூடிவருகிறது **(Eagles Gathering)**. உலகமெங்கிலும் நீர் வார்த்தையை வெளிப்படுத்திக்கொண்டு, ஒரு ஜனத்தை நீர் ஆயத்தப்படுத்திக்கொண்டிருக்கிறீர். அவர்கள் புத்தியில்லாத கன்னிகைகள் **(Foolish Virgins)** அல்ல. புத்தியுள்ள கன்னிகைகளாக **(Wise Virgins)** இருக்கிறார்கள். ஆண்டவரே நீர் அவர்களுடைய பாத்திரத்திலே பரிசுத்த ஆவியைத் **(Holy Ghost)** தந்திருக்கிறீர்.

அபிஷேகம்பண்ணப்பட்ட வார்த்தையை நீர் எங்களுக்குக் கொடுத்திருக்கிறீர். எங்களுடைய ஆத்துமாவை உயிர்ப்பிக்கிறீர். எங்களுடைய சரீரத்திற்கும் நீர் சுகத்தைத் தருகிறீர். "உன் ஆத்துமா வாழ்கிறதுபோல நீ எல்லாவற்றிலும் வாழ்ந்து சுகமாயிருப்பாயாக" என்று சொன்னவண்ணமாக, எங்களுடைய ஆத்துமா தேவனை நேசிக்கும்பொழுது, அவருடைய வார்த்தையை நேசிக்கும்பொழுது, சரீரத்திற்கும் நீர் அரோக்கியத்தைத் தருகிறீர். "அது எங்களுக்கு ஜீவனும், உடலுக்கெல்லாம் ஆரோக்கியமுமாய் இருக்கிறது" என்று எழுதியிருக்கிறபடி, உம்முடைய வார்த்தை எங்களுக்குச் சுகத்தைத் தரட்டும்.

இந்த வார்த்தை எங்களுக்கு ஐசுவரியத்தைத் தரட்டும். முதலாவது தேவனுடைய ராஜ்யத்தையும் அவருடைய நீதியையும் தேடும்போது, இவைகளெல்லாம் எங்களுக்குக் கூடக் கொடுக்கப்படும் என்று சொல்லியிருக்கிறீர். இந்த உலக வாழ்க்கைக்குத் தேவையான எல்லா நன்மைகளையும் தருவீராக. ஆத்துமாவின் தேவையை நீர் சந்திக்கும்போது, இந்த சரீரப்பிரகாரமான, உலகப்பிராகாரமான சகல தேவைகளையும் இயேசுவே நீர் சந்திப்பீராக. நாங்கள் எதிர்ப்பார்த்திருக்கிற அற்புதங்களைச்

செய்வீராக. எங்களுடைய ஜெபவிண்ணப்பங்களுக்கு நீர் பதில் அளிக்கவேண்டுமென்று ஜெபிக்கிறோம். உம்முடைய சமுகத்திலே வந்து, அன்னாளைப் போல யார் யார் ஜெபித்தார்களோ, அவர்களுடைய விண்ணப்பங்களைத் தெரியப்படுத்தினார்களோ, கர்த்தாவே அந்த ஜெபத்திற்கு நீர் பதிலளிப்பீராக. பெற்றுக்கொண்டோம் என்ற நம்பிக்கையோடு இந்த இடத்தை விட்டுச் செல்ல நீர் உதவி செய்யும்.

வார்த்தைக்காகக் காத்திருக்கும்பொழுது, நீர் எங்களுக்கு உம்முடைய வார்த்தையை திறக்கவேண்டும் என்று ஜெபிக்கிறோம். எம்மாவு சீஷர்களுக்கு, அந்த நேரத்தில் என்ன நடக்கிறது என்று காண்பித்தீர். அதைப்போல எங்கள் இருதயத்தை நீர் திறப்பீராக. வார்த்தையை நீர் ஆசீர்வதித்து அனுப்புவீராக. அபிஷேகம்பண்ணப்பட்ட வார்த்தையாய் **(Anointed Word)** இருக்கட்டும். அது வெறுமையாகத் திரும்பாமல் நீர் விரும்புகிறதைச் செய்து, நீர் அனுப்புகிற காரியமாகும்படி அதை வாய்க்கப்பண்ணுவீராக. நாங்கள் வார்த்தையைக் கேட்டு கேட்டு, வார்த்தையின் சாயலாக **(Word Image)** மாறத்தக்கதாக எங்களுக்குக் கிருபை தருவீராக. முழங்கால்படியிட்டிருக்கிற அனைவரையும் ஆசீர்வதியும். தாமதித்துக்கொண்டிருக்கிற உம்முடைய பிள்ளைகளைக் கூட்டிச்சேர்ப்பீராக. இந்த தொழுவத்திலே இல்லாத வேறே ஆடுகளையும் உம்முடைய மந்தையிலே கூட்டிச்சேர்ப்பீராக. நீர் எங்கள் மத்தியிலே உலாவும். எங்கள் மேல் அசைவாடும். நீரே மகிமைப்படுவீராக. கர்த்தராகிய இயேசுகிறிஸ்து நாமத்தில் வேண்டிக்கொள்கிறோம். ஆமென்.

**<u>மத்தேயு 24: 1 - 14</u>**

1. இயேசு தேவாலயத்தை விட்டுப் புறப்பட்டுப்போகையில், அவருடைய சீஷர்கள் தேவாலயத்தின் கட்டடங்களை அவருக்குக் காண்பிக்க அவரிடத்தில் வந்தார்கள்.
2. இயேசு அவர்களை நோக்கி: இவைகளையெல்லாம் பார்க்கிறீர்களே, இவ்விடத்தில் ஒரு கல்லின்மேல் ஒரு கல்லிராதபடிக்கு எல்லாம் இடிக்கப்பட்டுப்போகும் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார்.
3. பின்பு, அவர் ஒலிவமலையின்மேல் உட்கார்ந்திருக்கையில், சீஷர்கள் அவரிடத்தில் தனித்துவந்து: இவைகள் எப்பொழுது சம்பவிக்கும்? உம்முடைய வருகைக்கும், உலகத்தின் முடிவுக்கும் அடையாளம் என்ன? எங்களுக்குச் சொல்ல வேண்டும் என்றார்கள்.
4. இயேசு அவர்களுக்குப் பிரதியுத்தரமாக: ஒருவனும் உங்களை வஞ்சியாத படிக்கு எச்சரிக்கையாயிருங்கள்;

5. ஏனெனில், அநேகர் வந்து, என் நாமத்தைத் தரித்துக்கொண்டு: நானே கிறிஸ்து என்று சொல்லி, அநேகரை வஞ்சிப்பார்கள்.

6. யுத்தங்களையும் யுத்தங்களின் செய்திகளையும் கேள்விப்படுவீர்கள்; கலங்காதபடி எச்சரிக்கையாயிருங்கள்; இவைகளெல்லாம் சம்பவிக்கவேண்டியதே; ஆனாலும், முடிவு உடனே வராது.

7. ஜனத்துக்கு விரோதமாய் ஜனமும், ராஜ்யத்துக்கு விரோதமாய் ராஜ்யமும் எழும்பும்; பஞ்சங்களும், கொள்ளைநோய்களும், பூமியதிர்ச்சிகளும் பல இடங்களில் உண்டாகும்.

8. இவைகளெல்லாம் வேதனைகளுக்கு ஆரம்பம்.

9. அப்பொழுது, உங்களை உபத்திரவங்களுக்கு ஒப்புக்கொடுத்து, உங்களைக் கொலைசெய்வார்கள்; என் நாமத்தினிமித்தம் நீங்கள் சகல ஜனங்களாலும் பகைக்கப்படுவீர்கள்.

10. அப்பொழுது, அநேகர் இடறலடைந்து, ஒருவரையொருவர் காட்டிக் கொடுத்து, ஒருவரையொருவர் பகைப்பார்கள்.

11. அநேகங் கள்ளத்தீர்க்கதரிசிகளும் எழும்பி, அநேகரை வஞ்சிப்பார்கள்.

12. அக்கிரமம் மிகுதியாவதினால் அநேகருடைய அன்பு தணிந்துபோம்.

13. முடிவுபரியந்தம் நிலைநிற்பவனே இரட்சிக்கப்படுவான்.

14. ராஜ்யத்தினுடைய இந்தச் சுவிசேஷம் பூலோகமெங்குமுள்ள சகல ஜாதிகளுக்கும் சாட்சியாகப் பிரசங்கிக்கப்படும், அப்போது முடிவு வரும்.

**<u>மத்தேயு 24: 3</u>**

3. பின்பு, அவர் ஒலிவமலையின்மேல் உட்கார்ந்திருக்கையில், சீஷர்கள் அவரிடத்தில் தனித்துவந்து: இவைகள் எப்பொழுது சம்பவிக்கும்? உம்முடைய வருகைக்கும், உலகத்தின் முடிவுக்கும் அடையாளம் என்ன? எங்களுக்குச் சொல்ல வேண்டும் என்றார்கள்.

அருமையானவர்களே, இந்த வசனத்திலே, இயேசுகிறிஸ்துவின் சீஷர்கள் அவரிடத்தில் மூன்று கேள்விகளைக் கேட்கிறார்கள்.

1. இவைகள் எப்பொழுது சம்பவிக்கும்? தேவாலயத்திலே ஒரு கல்லின்மேல் ஒரு கல் இராதபடி இடிக்கப்படும் காலம் வரும் என்று சொன்னீரே, அது எப்பொழுது சம்பவிக்கும்?

2. உம்முடைய வருகை எப்பொழுது நடக்கும், அதனுடைய அடையாளங்கள் என்ன?

3. உலகத்தின் முடிவு எவ்விதமாக இருக்கும்?

இவ்விதமான மூன்று கேள்விகளைக் கேட்டார்கள். அதில் ஒன்று நடந்துவிட்டது. இயேசுகிறிஸ்துவுக்கு, அவருடைய சீஷர்கள் தேவாலயத்தைச் சுற்றிலும் காண்பித்து, “எவ்வளவு பெரிய கட்டடம்.

எவ்வளவு பிரம்மாண்டமாக இருக்கிறது. எவ்வளவு அலங்காரமாக, எவ்வளவு அழகாக இருக்கிறது" என்று அந்த கட்டடத்தைப் பார்த்து அவர்கள் சந்தோஷப்பட்டார்கள், பெருமைப்பட்டார்கள். அப்பொழுது இயேசுகிறிஸ்து என்ன சொல்லுகிறார்?

**மத்தேயு 24: 2**

2. இயேசு அவர்களை நோக்கி: இவைகளையெல்லாம் பார்க்கிறீர்களே, இவ்விடத்தில் ஒரு கல்லின்மேல் ஒரு கல்லிராதபடிக்கு எல்லாம் இடிக்கப்பட்டுப்போகும் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார்.

இவைகளையெல்லாம் பார்க்கிறீர்களே, இந்த தேவாலயத்தில் ஒரு கல்லின்மேல் இன்னொரு கல் இல்லாதபடி முற்றிலும் இடிக்கப்படும் என்று சொன்னார். அப்பொழுது அந்த தேவாலயம் பிரம்மாண்டமாக இருக்கிறது. நீங்கள் சில தேவாலயங்களைப் பார்த்தீர்களானால் மிகவும் பிரம்மாண்டமாக இருக்கும். அதைப்போல எருசலேம் தேவாலயம் பிரம்மாண்டமாக இருந்தது. தங்களுடைய சபையைக்குறித்து மேன்மைபாராட்டுகிறவர்கள் நிறைய பேர் இருக்கிறார்கள். அதைப்போல, சீஷர்கள் அந்த ஆலயத்தைக்குறித்து மேன்மைபாராட்டினார்கள். ஆனால் இயேசுகிறிஸ்து, அது ஒரு கல்லின்மேல் ஒரு கல் இராதபடி இடிக்கப்படும் என்று சொன்னார். அதற்கு அவர்கள், அது எப்பொழுது நடக்கும், உம்முடைய வருகையின் அடையாளம் என்ன, உலகத்தின் முடிவு எவ்விதமாக இருக்கும் என்று கேட்டார்கள். இரண்டாயிரம் வருஷங்களுக்கு முன்பே அவர்களுக்கு அந்த கேள்வி இருந்தது. அதே கேள்விதான் இன்றைக்கும் எல்லாருக்கும் இருக்கிறது.

அதில் மூன்றில் ஒரு தீர்க்கதரிசனம் **(Prophecy)** நிறைவேறிவிட்டது. கி.பி 70ல் தீத்து ராயன் **(Caesar Titus)** தேவாலயத்தை இடித்துப்போட்டான். ஒரு கல்லின்மேல் ஒரு கல் இராதபடி இடிக்கப்பட்டது. இன்னும் அந்த தேவாலயம் கட்டப்படாமலேயே இருக்கிறது. அதிலே பாழாக்கும் அருவருப்பு ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது. தேவாலயம் இருந்த இடத்திலே ஓமர் மசூதி **(Mosque of Omar)** இருக்கிறது. அதே அதிகாரத்தில் 15ம் வசனத்திலே, **"பாழாக்குகிற அருவருப்பைக்குறித்துத் தானியேல் தீர்க்கதரிசி சொல்லியிருக்கிறானே. வாசிக்கிறவன் சிந்திக்கக்கடவன்"** என்று இயேசுகிறிஸ்து சொல்லியிருக்கிறார். தற்பொழுது அது அங்கே இருக்கிறது. இயேசு சொன்ன வார்த்தை நிறைவேறிவிட்டது. வானமும்

பூமியும் அழிந்துபோனாலும் இயேசுகிறிஸ்து சொன்ன வார்த்தை நிறைவேறாமல் போகாது. அல்லேலூயா.

இந்த வேதத்திலே இருக்கிற எல்லா தீர்க்கதரிசனமும் நிச்சயமாக நிறைவேறும். அந்த விசுவாசத்திலேதான் நாம் ஆண்டவரைத் தேடுகிறோம். நான் ஏன் பிரசங்கம்பண்ணுகிறேன்? தேவனுடைய வார்த்தை பொய்யாக மாறாது. அது சரியாக நடக்கப்போகிறது. உங்கள் ஆத்துமாவுக்கு என்ன நடக்கும், உங்கள் வாழ்க்கையின் முடிவு எப்படி இருக்கும், என்று அது சொல்லுகிறது. அதனால்தான் நாம் ஒருவரை எச்சரிக்கிறோம். "நீ இவ்விதமாகப் போனால் முடிவிலே நரகத்திலேதான் சேருவாய்" என்று சொல்லுகிறோம். ஏன் அப்படி சொல்லுகிறோம்? வேதத்தில் அப்படி எழுதியிருக்கிறது. "உன் வாழ்க்கை அவ்விதமாகத்தான் இருக்கிறது. நீ இப்படி இருந்தால் வருகையில் போகமுடியாது. நீ புத்தியில்லாத கன்னிகையாக மாறிவிடுவாய். உனக்கு பரிசுத்த ஆவியாகிய எண்ணெய் இல்லை. நீ ஆண்டவரை அரைகுறையாகத் தேடுகிறாய், முழுமனதோடு தேடுகிறதில்லை. ஆவியிலே வளரவில்லை" என்று ஏன் சொல்லுகிறோம்? இந்த வேதம் அவ்விதமாகச் சொல்லுகிறது. அது நிறைவேரும்.

இந்த சகோதரன், சகோதரி கர்த்தருடைய வார்த்தையிலே அதிக வாஞ்சையாக இருக்கிறார்கள் என்று பாராட்டுகிறோம். ஏன் பாராட்டுகிறோம்? அவர்கள் புத்தியுள்ள கன்னிகைகளாக இருக்கிறார்கள், மேலே போகப்போகிறார்கள். அல்லேலூயா. வேதத்தில் அப்படி எழுதியிருக்கிறது. இது அழிந்துபோகாது, இது நிறைவேறும் என்ற நம்பிக்கையில்தான் தைரியமாகச் சொல்லுகிறோம். மனுஷனுடைய வார்த்தைகள் மாறிப்போகும், ஆனால் தேவனுடைய வார்த்தை மாறிப்போகாது. இதில் சொல்லியிருக்கிற அத்தனையும் நிறைவேறும். அல்லேலூயா.

இன்றைக்குக் கொடுக்கப்போகிற செய்தி "**ஏழு எக்காளங்களின் வெளிப்பாடு - மூன்றாம் பாகம்**". முதல் பாகத்திலே லேவியராகமம் 23ம் அதிகாரத்தைக் குறித்தும், யோசேப்பின் வாழ்க்கையைக்குறித்தும், ஏழு எக்காளங்கள் எப்படி நிறைவேறுகிறது என்பதைக்குறித்தும் பிரசங்கம்பண்ணினேன். இரண்டாம் பாகத்தில், ரூத்தின் புஸ்தகம் நான்கு அதிகாரங்களில், ஏழு எக்காளங்கள் எப்படி நிறைவேறுகிறது என்பதைப் பார்த்தோம். இன்றைக்கு, மத்தேயு 24ம் அதிகாரத்தில் ஏழு எக்காளங்கள்

எவ்விதமாக வருகிறது, அது எப்படி முத்திரைகளோடு (வெளி. 6ம் அதிகாரம்) தொடர்புடையதாய் இருக்கிறது, ஏழாம் தூதன் வாழ்க்கையிலே அவர் கண்ட தரிசனம் எப்படி ஏழு எக்காளங்களோடு இணைகிறது என்பதைச் சொல்ல விரும்புகிறேன்.

இந்தச் செய்தியை புரிந்துகொள்ள நாம் வேதத்தை நன்றாக அறிந்திருக்கவேண்டும். உங்களுக்கு பரிசுத்த ஆவியானவரின் உதவி தேவை. போதிப்பதற்கு எனக்கும் பரிசுத்த ஆவியானவரின் உதவி தேவை. நீங்கள் பரிசுத்த ஆவியானவரைச் சார்ந்திருப்பீர்கள் என்றால், பரிசுத்த ஆவியானவர், நான் என்ன சொல்லுகிறேன் என்பதை உங்களுக்கு விளங்கும்படி செய்வார். அதற்காகத்தான் வேதத்தை நன்றாகப் படிக்கவேண்டும் என்று சொல்லுகிறோம். வேதத்தை நன்றாகப் படித்து, நாம் ஆவியிலே இருந்தோமென்றால், பிரசங்கத்தை நன்றாகப் புரிந்துகொள்ளமுடியும். ஏனென்றால் இது குறுக்கெழுத்துப் புதிராக **(Jigsaw Puzzle)** இருக்கிறது. வேதத்தில் இங்கும் அங்குமாக எழுதியிருக்கிறது. தீர்க்கதரிசியும் இங்கும் அங்குமாகத்தான் நிறைய இடத்தில் சொல்லியிருக்கிறார். ஆகையால், ஒரு போதகர் அதையெல்லாம் அபிஷேகத்தின்கீழ் ஒன்றுசேர்க்கவேண்டியதாய் இருக்கிறது. சிதறி இருக்கும் வார்த்தைகளை சரியானபடி கொண்டுவரவேண்டும். அப்பொழுதுதான் நமக்கு அந்த முழுப்படமும் **(Whole Picture)** கிடைக்கும்.

நீங்கள் கவனமாகக் கேட்டால் உங்களுக்கு ஆசீர்வாதம். வேதத்தில் என்ன சொல்லியிருக்கிறது? வெளிப்படுத்தின விசேஷத்தை வாசிக்கிறவர்களும், கேட்கிறவர்களும், அதின்படி செய்கிறவர்களும் பாக்கியவான்கள். இந்த பிரசங்கத்தைக் கேட்டாலே உங்களுக்கு ஆசீர்வாதம். நான் வெளிப்படுத்தின் விசேஷத்தைக்குறித்து பேசிக்கொண்டிருக்கிறேன். இதைக் காதாலே கேட்டாலே ஆசீர்வாதம் என்றால், கைக்கொண்டால் எவ்வளவு ஆசீர்வாதம் என்று பாருங்கள். அந்த புஸ்தகத்தை வாசித்தாலே ஆசீர்வாதம். வேறே எந்த புஸ்தகத்திற்கும் அவ்விதமாகச் சொல்லவில்லை. அதற்காகத்தான் நாம் அந்த புஸ்தகத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கிறோம்.

நீங்கள் உங்கள் கையில் வைத்திருக்கிற முழு வேத புத்தகமும் ஒரே ஒரு நோக்கத்தைத்தான் வெளிப்படுத்துகிறது **(The entire Bible is an expression of one goal or one purpose)**. தேவனுடைய சிந்தையில் மறைந்திருந்த காரியத்தை இந்த வேதம் வெளிப்படுத்துகிறது. என்ன

மறைந்திருந்தது? மீட்பின் திட்டம் **(Plan of Redemption)**. அல்லேலூயா. இந்த வேதத்தைப் படிப்பதற்காக வேதாகமக் கல்லூரி **(Bible College)** இருக்கிறது. வேத சாஸ்திரம் **(Theology)** படித்தவர்கள், தெய்வீகத்தில் மருத்துவ பட்டம் **(B. D, M. D, D. D)** பெற்றவர்களெல்லாம் இருக்கிறார்கள். அவர்களுக்கெல்லாம் இந்த வேதம் புரியாது. “அமெரிக்காவில் சென்று வேதாகமக் கல்லூரியில் படித்தேன்” என்பார்கள். இந்தப் போதகர் ஆங்கில புலமை உள்ளவர் என்று சொல்லுவார்கள். ஆங்கிலம் தெரிந்தாலும், எபிரெய, கிரேக்க பாஷைத் தெரிந்தாலும், பரிசுத்த ஆவியானவர் வெளிப்படுத்தவில்லை என்றால் அவர்களுக்கு ஒன்றும் தெரியாது. தேவனுடைய வார்த்தை ஒரு தீர்க்கதரிசிக்கு வருகிறது. அல்லேலூயா. அவர் எவ்வளவு படித்திருக்கிறார்? ஏழாம் வகுப்புதான் **(7th grade)** படித்திருக்கிறார். மீட்பின் திட்டமானது தேவனுடைய சிந்தையில் மறைந்திருந்தது. இதோ, கர்த்தர் இந்தக் கடைசிகாலத்தில் அதை வெளிப்படுத்தியிருக்கிறார். ஞானிகளுக்கும் கல்விமான்களுக்கும் மறைத்து பாலகராகிய உங்களுக்கும் எனக்கும் அதை வெளிப்படுத்தியிருக்கிறார். அல்லேலூயா. எவ்வளவு பெரிய சிலாக்கியம் அது!

மீட்பின் திட்டமானது மூன்று நோக்கங்களைக் கொண்டதாய் இருக்கிறது **(Plan of Redemption has Threefold Purpose)**. முதலாவது, ஆதாமை மீட்கவேண்டும். இரண்டாவது, எவாளை மீட்கவேண்டும். மூன்றாவது, ஏதேனை மீட்கவேண்டும் **(To redeem Adam, Eve and Eden)**. பழைய ஏற்பாட்டில் ஆதாம் எப்படி மீட்கப்படுகிறான் என்று சொல்லியிருக்கிறது. புதிய ஏற்பாட்டில் ஏவாளை ஆண்டவர் எப்படி மீட்கிறார் என்று சொல்லப்பட்டிருக்கிறது. அதன்பின்பு, இந்த பூமி எவ்விதமாக மீட்கப்படுகிறதென்பதை, நீங்கள் வெளிப்படுத்தின விசேஷத்தில் வாசிக்கமுடியும். ஆதாம் ஏற்கனவே மீட்கப்பட்டாயிற்று. இயேசுகிறிஸ்து இரண்டாம் ஆதாமாக வந்தபோது ஆதாம் மீட்கப்பட்டாகிவிட்டது. ஏவாள் சபைக்கு அடையாளமாய் இருக்கிறாள். சபையானது இப்பொழுது மீட்பின் திட்டத்தின் முடிவிலே இருக்கிறது. சபையானது மீட்கப்பட்டப்பின்பு, இந்தப் பூமியை ஆண்டவர் மீட்பார். இரண்டு கட்டங்கள் வந்துவிட்டது. மூன்றாவது கட்டத்திற்காக இந்தப் பூமி காத்திருக்கிறது. எல்லாமே மூன்று கட்டங்களாகத்தான் **(Three Stages)** இருக்கிறது.

இப்படி வேதபுத்தகம் மிகவும் அருமையாக எழுதப்பட்டிருக்கிறது. கடலை விட இது ஆழம் அதிகம்தான். இது தேவனுடைய அன்பை வெளிப்படுத்துகிறது. இதில் உங்களுக்கு வாஞ்சை வந்ததென்றால் நீங்கள் விடமாட்டீர்கள். அப்படி வாஞ்சை வந்து, தாகத்தோடு இருந்தால், நீங்கள் கண்டிப்பாக எடுத்துக்கொள்ளப்படுதலில் **(Rapture)** பங்குபெறுவீர்கள். எடுத்துக்கொள்ளப்படுதலில் போவதற்கு அதுதான் அடையாளம். சும்மா கணினியிலும் **(Computer)**, அலைப்பேசியிலும் **(Cell Phone)** தேவையில்லாத காரியங்களைப் பார்த்து, நேரத்தையும் காலத்தையும் வீணாக்கினால், புத்தியில்லாத கன்னிகையாக **(Foolish Virgin)** மாறிவிடுவோம். ஆண்டவர் அறிவியில் கருவிகளைக் **(Scientific Instruments)** கொடுத்திருக்கிறார். அவைகளை நாம் தேவ நாமத்திற்கு மகிமையாய் பயன்படுத்தலாமேயன்றி மாம்ச பிரகாரமாகப் பயன்படுத்தக்கூடாது.

தேவனுடைய மூன்று நோக்கங்களைக் கொண்ட அந்த மீட்பின் திட்டமானது ஏழு முத்திரைகளால் முத்திரிக்கப்பட்டிருந்தது **(Threefold purpose was sealed with Seven Seals)**. ஏழு முத்திரைகள் புஸ்தகம் **(Seven Seals Book)** என்றால் என்ன நினைக்கிறார்கள்? “**ஏழு முத்திரைகளின் வெளிப்பாடு**” என்ற புஸ்தகத்தைத்தான் நினைக்கிறார்கள். சென்னையில் இருக்கிற நிறைய பேர் அப்படித்தான் நினைக்கிறார்கள். அந்த புஸ்தகம் இல்லை, இந்த வேதபுத்தகம்தான் **(Bible)** அந்த ஏழு முத்திரைகள் புஸ்தகம். அவர்களுக்கு அது தெரியவில்லை. மிகவும் மூத்த விசுவாசிகளுக்குத் தெரியவில்லை, போதகர்களுக்கும் தெரியவில்லை. மிக வேதனையான காரியம் என்னவென்றால், அவர்கள் நம்மிடம் வந்து தர்க்கம்பண்ணுவார்கள். அதனால்தான் நான் அப்படி சொல்லுகிறேன். என்னிடம் வந்து மோதுகிறார்கள். இந்த வேதம்தான் அந்த புஸ்தகம். இது தான் ஏழு முத்திரைகளால் முத்திரிக்கப்பட்டிருக்கிறது. அந்த மீட்பின் திட்டம் முத்திரிக்கப்பட்டிருக்கிறது. இன்றைக்கு அது திறக்கப்பட்டிருக்கிறது. அல்லேலூயா. அந்த வெளிப்பாடுகளை அந்த “ஏழு முத்திரைகளின் வெளிப்பாடு” என்ற புஸ்தகத்தில் நாம் பார்க்கலாம். அந்த புஸ்தகத்தில் மாத்திரமல்ல, எல்லா புஸ்தகத்திலும் நாம் பார்க்கலாம். “ஏழு சபைக்காலங்கள்” புஸ்தகத்திலும் இருக்கிறது.

மீட்பின் திட்டமானது ஏழு முத்திரைகளால் முத்திரிக்கப்பட்டிருக்கிறது. அது பல ஆவிக்குரிய வார்த்தைகளில் **(Spiritual Terms)** எழுதி இருக்கிறது. ஏழு சபைக்காலங்கள் **(Seven Church Ages)**, ஏழு

முத்திரைகள் **(Seven Seals)**, ஏழு எக்காளங்கள் **(Seven Trumpets)**, ஏழு கோபகலசங்கள் **(Seven Vials)** என்று எழுதியிருக்கிறது. எல்லாமே அடையாள சின்னங்களால் முத்திரிக்கப்பட்டிருந்தது. இன்றைக்கு அது வெளிப்பட்டிருக்கிறது. அல்லேலூயா. ஆண்டவர் தம்முடைய சிந்தையில் இருந்ததைத் தம்முடைய தீர்க்கதரிசிக்கு வெளிப்படுத்தினார். தீர்க்கதரிசிக்கு வெளிப்படுத்தினாலும், சபையார் அதை எளிதாக புரிந்துகொள்வதற்காக ஆண்டவர் ஒரு அபிஷேகம்பண்ணப்பட்டப் போதகரைக் கொண்டுவந்து, வேதத்தையும் தீர்க்கதரிசி செய்தியையும் ஒப்பிட்டு உங்களுக்குச் சொல்லும்போது, அது உங்களுக்கு வாழைப்பழத்தை உரித்துக் கொடுத்த மாதிரி இருக்கிறது. அதன்பின்பும் நீங்கள் சாப்பிடவில்லை என்றால் அது உங்கள்மேல்தான் தவறு. கர்த்தர் இவ்விதமாக நமக்குச் செய்கிறார்.

மீட்பின் திட்டம் அவ்விதமான பல ஆவிக்குரிய வார்த்தைகளில் எழுதியிருக்கிறது. சிலர் அதை வாழ்ந்து காண்பித்திருக்கிறார்கள். அந்த விசுவாசிகளின் வாழ்க்கையும், செயல்பாடுகளும் ஒரே நோக்கத்தைத்தான் வெளிப்படுத்துகிறது **(The lives and the acts of the believers were expressing one goal and one purpose)**. அவர்கள் வாழ்க்கையில் ஏழு முத்திரைகள் வருகிறது. அவர்கள் வாழ்க்கையில் ஏழு எக்காளங்கள் வருகிறது. நாம் யோசேப்பின் வாழ்க்கையில் ஏழு எக்காளங்களைப் பார்த்தோம். ரூத்தின் வாழ்க்கையில் ஏழு எக்காளங்களைப் பார்த்தோம். இவ்விதமாய் அவர்களெல்லாம் வாழ்ந்து காண்பித்திருக்கிறார்கள். எதை வாழ்ந்து காண்பித்திருக்கிறார்கள்? இந்த மீட்பின் திட்டத்தைத்தான் **(Plan of Redemption)** வாழ்ந்து காண்பித்திருக்கிறார்கள். அல்லேலூயா. இப்பொழுது நீங்களும் வாழ்ந்து காண்பிக்கிறீர்கள். நீங்கள் தேவனுடைய வார்த்தையின் வியாக்கியானமாக இருக்கிறீர்கள் **(You are the interpretation of God's Word)**. அதைப்போல, அவர்களும் அவர்கள் காலத்தில் அதை அறியாமலேயே வாழ்ந்து காண்பித்திருக்கிறார்கள். இப்பொழுது ஆண்டவர் முத்திரைகளைத் திறந்ததினாலே அது வெளிப்படுகிறது. மறைக்கப்பட்டிருந்தது இப்பொழுது வெளிப்படுகிறது.

ஆபிரகாமின் வாழ்க்கையில் ஏழு சபைக்காலங்கள் இருக்கிறது. ஆனால் அங்கே ஏழு சபைக்காலங்கள் என்று எழுதியிருக்கிறதா? பழைய ஏற்பாட்டில், ஆதியாகமத்தில் எழுதியிருக்கிறதா? இல்லை. ஆண்டவர் இன்றைக்கு அதை வெளிப்படுத்துகிறார். முத்திரைகள் திறக்கப்படவில்லை என்றால் வெளிப்படாது. அதை முத்திரித்து வைத்திருந்தார். இன்றைக்கு

அது வெளிப்படுகிறது. ஆதியாகமம் 12ம் அதிகாரத்தில், கர்த்தர் ஆபிரகாமை, "ஊர் என்கிற கல்தேயாவை விட்டு புறப்பட்டு வா" என்று சொல்லுகிறார். 12ம் அதிகாரம் முதல் சில வசனங்களில், **"நீ உன் தேசத்தையும், உன் இனத்தையும், உன தகப்பனுடைய வீட்டையும் விட்டுப் புறப்பட்டு, நான் உனக்கு காண்பிக்கும் தேசத்துக்குப் போ. நான் உன்னைப் பெரிய ஜாதியாக்கி, உன்னை ஆசீர்வதித்து, உன் பேரைப் பெருமைப்படுத்துவேன்; நீ ஆசீர்வாதமாய் இருப்பாய்"** என்று சொல்லும்பொழுது, அது நீதிமானாக்கப்படுதலைக் **(Justification)** குறிக்கிறது. 15ம் அதிகாரத்திலே, "ஆண்டவரே நீர் என்னை ஆசீர்வதிப்பீர் என்று நான் எதினால் அறிவேன்" என்று சொல்லும்பொழுது, ஒரு பலியைக் கொண்டுவா என்று கர்த்தர் சொல்லுகிறார். அந்த பலி பரிசுத்தமாக்கப்படுதலுக்கு **(Sanctification)** அடையாளமாய் இருக்கிறது. லூத்தரில் நீதிமானாக்கப்படுதலையும், வெஸ்லியில் பரிசுத்தமாக்கப்படுதலையும் பார்க்கிறோம். அதன்பின்பு, 17ம் அதிகாரத்திலே, கர்த்தர், ஆபிராம் **(Abram)** என்ற பேரை ஆபிரகாம் **(Abraham)** என்று மாற்றுகிறார். சாராயை **(Sarai)** சாராள் **(Sarah)** என்று மாற்றுகிறார். அவர்களுக்கு புதிய நாமம் கொடுக்கப்படுகிறது. அது பரிசுத்த ஆவியின் அபிஷேகத்திற்கு **(Baptism of the Holy Ghost)** அடையாளமாயிருக்கிறது. அது பெந்தெகொஸ்தே காலத்தைக் குறிக்கிறது. அதன்பின்பு, ஆதியாகமம் 18ம் அதிகாரத்தில், ஆண்டவர் ஒரு மனுஷனைப்போல வருகிறார். ஆபிரகாம் அவரை உபசரிக்கிறான். **"ஒரு உற்பவகாலதிட்டத்தில் நிச்சயமாய் உன்னிடத்திற்குத் திரும்ப வருவேன்; அப்பொழுது உன் மனைவியாகிய சாராளுக்கு ஒரு குமாரன் இருப்பான்"** என்று ஆண்டவர் சொல்லும்பொழுது, அது மனுஷகுமாரனுடைய ஊழியம் **(Son of Man Ministry)**. இப்பொழுது நாம் அதில் இருக்கிறோம். எப்படி பொருந்துகிறதென்று பாருங்கள். ஏழு சபைக்காலங்கள் ஆபிரகாமுடைய ஜீவியத்தில் மறைக்கப்பட்டிருக்கிறது. இன்றைக்கு அது வெளிப்பட்டிருக்கிறது.

முத்திரைகள் திறக்கப்படவில்லை என்றால் அது வெளிப்படுமா? ஒரு போதகர் அப்படிச் சொல்ல முடியுமா? சொல்லமுடியாது. அவர்கள் அந்த "புத்தகம்", "புத்தகம்" என்று அதையே படித்துக்கொண்டிருக்கிறார்கள். வேதத்தை விட அந்த புத்தகத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கிறார்கள். அது இந்த வேதத்தில் இருக்கிறது. அது அவர்களுக்குத் தெரியாது. நீங்கள்

யாரும் அப்படி நினைத்துக்கொண்டிருக்காதீர்கள். அவர்களுக்கு இயேசுகிறிஸ்துவைவிட தீர்க்கதரிசிதான் முக்கியம். “தீர்க்கதரிசி சொன்னார்”, “தீர்க்கதரிசி சொன்னார்” என்று சொல்லுவார்கள். “இயேசுகிறிஸ்து சொன்னார்”, “தேவனுடைய வார்த்தைச் சொல்லுகிறது” என்று அவர்கள் வாயிலிருந்து வராது. அப்படிப்பட்டவர்கள் புத்தியில்லாத கன்னிகைகளாக இருக்கிறார்கள். முத்திரைகள் திறக்கப்பட்டாலும், அவர்கள் வாழ்க்கையின் முத்திரை இன்னும் திறக்கப்படவில்லை. அவர்களுக்கு, வேதம் இன்னும் முத்திரிக்கப்பட்ட புஸ்தகமாகத்தான் இருக்கிறது. ஆகாயத்தில் சிலம்பம்பண்ணுகிறவர்கள்போல சிலம்பம்பண்ணுகிறார்கள். தீர்க்கதரிசியை ஆண்டவர் எதற்காக அனுப்பினார், என்ன வெளிப்படுத்தினார் என்று அவர்களால் நிதானிக்க முடியவில்லை. அந்த கிருபை அவர்களுக்குக் கொடுக்கப்படவில்லை. உங்களுக்கு அந்த கிருபை கொடுக்கப்படுகிறது, நீங்கள் பற்றிக்கொள்ளுங்கள். அதைப் பிடித்துக்கொள்ளுங்கள்.

யோசேப்பின் வாழ்க்கையில் நாம் ஏழு எக்காளங்களைப் பார்த்தோம். அவன் சிறைச்சாலையில் இருக்கும்பொழுது, அது சிலுவையைக் குறிக்கிறது. அது பஸ்கா பண்டிகை, புளிப்பில்லா அப்பப்பண்டிகை. பின்பு சிறைசாலையில் இருந்து வெளியே வரும்போது, அது முதற்பலன்களின் பண்டிகை. அவன் ஆஸ்நாத்தை விவாகம்பண்ணி, எப்பிராயீம், மனாசே என்ற பிள்ளைகளைப் பெறும்போது, அது பெந்தெகொஸ்தே பண்டிகை. ஆண்டவர் ஒரு புறஜாதி மணவாட்டியைப் பெற்றுக்கொள்ளுகிறார். அதன்பின்பு, அவனுடைய சகோதரர்கள் தானியம் வாங்க வருகிறார்கள். யோசேப்பிடம் அவர்கள் கூட்டிச் சேர்க்கப்படும்போது, அது எக்காளப் பண்டிகை. யூதர்களை ஆண்டவர் வாக்குத்தத்தம்பண்ணின தேசத்தில் **(Promised Land)** கூட்டிச் சேர்க்கிறார். பின்பு தன்னுடைய மனைவியை அரண்மனைக்குள் அனுப்பிவிட்டு, தன் சகோதரர்களுக்குத் தன்னை வெளிப்படுத்துகிறான். அது பாவநிவிர்த்தி பண்டிகை. கடைசியாக அவனும், அவன் மனைவி பிள்ளைகளும், அவன் சகோதரர்களும் எகிப்தின் செழிப்பை அனுபவிக்கிறார்கள். அது கூடாரப்பண்டிகை. அது ஆயிரவருட ஆளுகையைக் குறிக்கிறது. நாம் இந்த உலகத்தில் வந்து செழிப்பாக இருக்கப்போகிறோம்.

எக்காளப் பண்டிகை எங்கே இருக்கிறது? அது யோசசேப்பின் வாழ்க்கையில் இருக்கிறது. முத்திரைகள் திறக்கப்படவில்லை என்றால்

அது வெளிப்படுமா? வெளிப்படாது. அது என்ன? மீட்பின் திட்டம். எப்படி எழுதியிருக்கிறது? எக்காளங்களாக எழுதியிருக்கிறது. அது ஆதியாகமத்தில் எக்காளங்கள் என்று எழுதியிருக்கிறதா? இல்லை. அது ஒரு காரியத்தைச் சொல்லும் முறை **(Terminology)**. எக்காளங்கள் மீட்பின் திட்டத்தைக் குறிக்கிறது. ஆண்டவர் ஆதாமை எப்படி மீட்கிறார், ஏவாளை எப்படி மீட்கிறார், இந்த உலகத்தை எப்படி மீட்கிறார் என்பதுதான் நம்முடைய மனதில் இருக்கவேண்டும். அது உங்கள் மனதில் இருந்தால் நீங்கள் கர்த்தரை விட்டு பின்வாங்கிப் போகமாட்டீர்கள். இந்த ஊழியத்திற்கு இடறலாய் இருக்கமாட்டீர்கள். இது எடுத்துக்கொள்ளப்படுதல் நடக்க வேண்டிய நேரம். மீட்பின் திட்டம் என்றால் என்ன, அது வேதத்தில் எப்படியெல்லாம் எழுதப்பட்டிருக்கிறது என்று ஆராய்ந்துப் பார்த்து, நாம் சந்தோஷப்பட வேண்டிய நேரம். அல்லேலூயா.

தேவனுடைய வார்த்தையைத் தவறாகப் பொருத்தக்கூடாது **(misplace or mislocate)** என்று தீர்க்கதரிசி சகோ. பிரன்ஹாம் சொல்லுகிறார். தவறாகப் பொருத்தக்கூடாது, தவறாக வியாக்கியானம்பண்ணக்கூடாது **(misinterpret)**. மாடு புல்வெளியில்தான் மேயும். அது வீட்டிற்கு மேலே புல்லை மேய்கிற மாதிரி போட்டால், அது தவறான படம். பாலைவனத்தில் தூண்டில்போட்டு மீன் பிடிக்கிற மாதிரி படம் வரையக்கூடாது. அதைப்போல, சிலர் தேவனுடைய வார்த்தையைத் தவறாகப் பொருத்திக் காண்பிக்கிறார்கள். படம் எப்படி இருக்கவேண்டும்? தண்ணீர் நிறைந்த ஏரியில் மீன்பிடிக்கிற மாதிரி இருந்தால், அது சரியான படம். மீன்களே இல்லாத பாலைவனத்தில் மீன் பிடிப்பதுபோல் படம் போட்டால் எப்படி? மாடு புல்வெளியில் மேய்வதைப்போல் படம் போட்டால் அது சரியான படம். அதைப்போல, எடுத்துக்கொள்ளப்படுதல் எப்போது நடக்கும்? உபத்திரவகாலத்திற்கு முன்னாலே நடக்கும். அது ஏழு சபைக்காலங்களுக்குப் பின் நடக்கவேண்டும். அது ஐந்தாம் எக்காளத்துக்கும் ஆறாம் எக்காளத்துக்கும் மத்தியில் வரவேண்டும். அது ஐந்தாம் முத்திரைக்கும் ஆறாம் முத்திரைக்கும் மத்தியில் வரவேண்டும். ஒரு போதகர் அதைச் சரியாகப் பொருத்திக் காண்பிக்கவேண்டும். நீங்கள் அதைச் சரியாகப் புரிந்துகொண்டால், நீங்கள் வாழுகிற காலம் இன்னதென்றும், இந்த நேரத்தில் நீங்கள் எப்படி வாழவேண்டும் என்றும் நீங்கள் அறிந்துகொள்ளமுடியும். ஆமென்.

முத்திரைகளைக் குறித்து வெளிப்படுத்தல் ஆறாம் அதிகாரத்திலே நாம் வாசிக்கிறோம். ஆறாம் அதிகாரம், முதல் எட்டு வசனங்களில் முதல் நான்கு முத்திரைகளை வாசிக்கிறோம். ஒவ்வொரு முத்திரையும் இரண்டு இரண்டு வசனங்களில் எழுதப்பட்டிருக்கிறது. முதல் நான்கு முத்திரைகளில் ஏழு சபைக்காலங்கள் அடங்கியிருக்கிறது. அதுதான் இந்த படத்தில் ஏழு சபைக்காலங்களும் நான்கு முத்திரைகளுக்குள் போடப்பட்டிருக்கிறது. அது ஐந்தாம் முத்திரை, ஆறாம் முத்திரைகளுக்குப் போகாது. முத்திரைகளோடு சபைக்காலங்கள் இணைகிறது. இதோடு எக்காளங்களும் இருக்கிறது.

பவுல் **(Paul)**, இரேனியஸ் **(Irenaeus)**, மார்டின் **(Martin)** ஆகிய மூன்று தூதர்களும் சிங்கத்தின் காலத்தில் **(Lion Age)** இருக்கிறார்கள். ஒரு போதகர் இந்த படத்தைப் பார்த்துவிட்டுப்போய், இந்த படம் தவறென்றும், முதலாம் சபைக்காலம் மட்டும்தான் சிங்கத்தின் காலம் என்று இன்னொரு போதகரிடம் சொல்லியிருக்கிறார். அது தவறு. முதல் மூன்று சபைக்காலங்கள் முதலாம் முத்திரையின் கீழ் வருகிறது. இந்தப் படம்தான் சரியானது. சிலர் அதைத் தவறாகப் போடுவார்கள். பவுல், இரேனியஸ், மார்டின் ஆகிய மூன்று பேருக்கும் சிங்கத்தின் அபிஷேகம் **(Lion Anointing)** இருந்தது. சிங்கம் பயப்படாது. அதைப்போல, அவர்கள் தைரியமாகப் பேசினார்கள். தேவனுடைய வார்த்தையைக் குறித்து பயப்படவோ அல்லது வெட்கப்படவோ இல்லை. சிலர் தேவனுடைய வார்த்தையைப் பேசுவதற்கு வெட்கப்படுவார்கள். **"கிறிஸ்துவின் சுவிசேஷத்தைக் குறித்து நான் வெட்கப்படமாட்டேன்"** என்று பவுல் சொல்லுகிறார். சிலர் பயப்படுவார்கள். பயமும் வெட்கமும் இருந்தால் ஊழியம் செய்யமுடியாது. இந்த மூன்று பேரும் சிங்கத்தைப்போல தைரியமாகப் பேசினார்கள். காரணம், அவர்களுக்குக் கொடுத்த அபிஷேகம் அவ்விதமான அபிஷேகம்.

அதன்பின்பு கொலம்பா **(Columba)** வரும்போது, அது இருளின் காலம் **(Dark Ages)**. அது தியத்தீரா சபையின் காலம். அந்த ஒரு சபைக்காலம் மட்டும் இரண்டாம் முத்திரையில் அடங்கியிருக்கிறது. அது காளையின் காலம் **(Ox Age)**. காளையானது பலிசெலுத்தக்கூடிய மிருகம். அது பலியானது. எல்லாரும் மரித்தார்கள். கர்த்தருடைய வார்த்தைக்காக நின்ற ஆறு கோடியே எண்பது இலட்சம் **(68 million)** கிறிஸ்தவர்களை கத்தோலிக்க மார்க்கம் கொலை செய்தது. அநேக கொடுங்கோல் மன்னர்களும் கொலை செய்தார்கள். அவர்கள் தங்களை பலியாக ஒப்புக்கொடுத்தார்கள். எப்படி அவர்கள் தைரியமாக சாவுக்கு

ஒப்புக்கொடுத்தார்கள்? ஆண்டவர் அவர்களுக்கு அந்த அபிஷேகத்தைக் கொடுத்தார். அல்லேலூயா. என்ன அபிஷேகம்? காளையின் ஆவி **(Ox Anointing)**.

அதன்பின்பு, லூத்தர் **(Luther)**, வெஸ்லி **(Wesley)**, மற்றும் பெந்தெகொஸ்தே காலம் **(Pentecostal Age)**. பெந்தெகொஸ்தே காலம் சபைக்காலங்களில் எழுதப்படவில்லை. ஆனால், அது உள்ளே அடங்கியிருக்கிறது. வெஸ்லிக்குப் பிறகு பெந்தெகொஸ்தே காலம் வருகிறது. ஆண்டவர் அந்த பெந்தெகொஸ்தே காலத்தை கணக்கிலேயே வைக்கவில்லை. ஆனால், அது அதற்குள்ளே இருக்கிறது. லூத்தர், வெஸ்லி, பெந்தெகொஸ்தே வரும்போது, அது மனுஷ முகத்தின் **(Man Age)** காலமாயிருந்தது. அவர்களுக்கு ஆண்டவர் அந்த அபிஷேகத்தைக் கொடுத்தார். அது சீர்திருத்தக்காலமாய் **(Age of Reformation)** இருந்தது. மனுஷனுக்கு என்ன உண்டு? ஞானம் உண்டு. அறிவு உண்டு. கத்தோலிக்க மார்க்கத்தின் தன்மைகளை அவர்கள் ஜனங்களுக்கு வெளிப்படுத்தி, அந்த பாபிலோனை விட்டு ஜனங்களை ஓரளவுக்கு வார்த்தைக்குக் கொண்டுவந்தார்கள். நீதிமானாக்கப்படுதல் **(Justification)**, பரிசுத்தமாக்கப்படுதல் **(Sanctification)**, பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெறுதல் **(Receiving the gift of the Holy Ghost)** போன்ற அனுபவங்களுக்கு இவர்கள் கொண்டுவந்தார்கள். காரணம் ஆண்டவர் அவர்களுக்கு அந்த மனுஷனின் ஆவியைக் **(Man Anointing)** கொடுத்திருந்தார். அல்லேலூயா.

பெந்தெகொஸ்தே வீழ்ச்சியடைந்துவிட்டது. 1963ல் முத்திரைகள் திறக்கப்பட்டப்பின்பு பெந்தெகொஸ்தே வீழ்ச்சியடைந்துவிட்டது. அது லவோதிக்கேயாவின் நிலைமையை அடைந்து, அனலுமில்லாமல் குளிருமில்லாமல் போய்விட்டது. அநேக அங்கத்தினர்களைச் சேர்க்கவேண்டும், அதிகமாகப் பணத்தைச் சேர்க்கவேண்டும், ஐசுவரியமுள்ளவர்கள் ஆகவேண்டும் என்று லவோதிக்கேயாவின் நிலைமையை அடைந்ததால் அந்தக் காலம் முடிவடைந்துவிட்டது. இப்பொழுது நாம் கழுகின் காலத்தில் **(Eagle Age)** இருக்கிறோம். அல்லேலூயா.

ஆண்டவர் சகோ. பிரன்ஹாமுக்கு என்ன அபிஷேகம் கொடுத்தார்? கழுகின் ஆவியைக் **(Eagle Anointing)** கொடுத்தார். இது தீர்க்கதரிசனத்தின் காலமாய் **(Prophetic Age)** இருக்கிறது. இந்தத் தீர்க்கதரிசனத்தின் ஆவி

நமக்குக் கொடுக்கப்படுகிறது. **“இயேசுவைப் பற்றின சாட்சி தீர்க்கதரிசனத்தின் ஆவியாயிருக்கிறது”**. நீங்கள் இந்த சத்தியத்தை யாருக்காவது சொன்னால், நீங்கள் தீர்க்கதரிசனம் உரைக்கிறீர்கள். ஒவ்வொரு போதகரும் ஒரு தீர்க்கதரிசி என்று சகோ. பிரன்ஹாம் சொல்லுகிறார். வார்த்தை தீர்க்கதரிசி **(Word Prophet)** அல்ல. சகோ. பிரன்ஹாம் வார்த்தை தீர்க்கதரிசியாக இருக்கிறார். ஆனால் நீங்கள் இந்த செய்தியைச் சொல்லும்போது, இது தீர்க்கதரிசன செய்தி **(Word of Prophecy)**. கர்த்தர் இப்பொழுது என்ன செய்கிறார் என்று மற்றவர்களுக்குத் தெரியாது. இதுவரைக்கும் என்ன செய்தார் என்றும் தெரியாது. இனிமேலும் என்ன செய்யப்போகிறார் என்றும் தெரியாது. உங்களுக்கு எல்லாமே தெரியும். ஆகையால், நீங்கள் இந்த செய்தியைச் சொல்லும்போது அது தீர்க்கதரிசனமாய் இருக்கிறது. நீங்கள் எல்லாருமே உரைக்கவேண்டும். “புஸ்தகத்தைப் புசி. நீ தீர்க்கதரிசனம் உரை” என்று யோவானுக்குச் சொல்லப்பட்டது. போதகர் மட்டுமல்ல எல்லாருமே உரைக்கவேண்டும். அல்லேலூயா.

அதன்பின்பு, பெந்தெகொஸ்தே பண்டிகை. ஏழு சபைக்காலங்களில், பெந்தெகொஸ்தே காலம் வரைக்கும் நாலாவது பண்டிகையாக இருக்கிறது. முதலாவது பண்டிகை பஸ்கா பண்டிகை **(Feast of Passover)**. இரண்டாவது, புளிப்பில்லா அப்பப்பண்டிகை **(Feast of Unleavened Bread)**. மூன்றாவது, முதற்பலன்களின் பண்டிகை **(Feast of Firstfruits)**. நாலாவது, பெந்தெகொஸ்தே பண்டிகை **(Feast of Pentecost)**. ஐந்தாவது, எக்காளப் பண்டிகை **(Feast of Trumpet)**. ஆறாவது, பாவநிவிர்த்தி பண்டிகை **(Feast of Atonement)**. ஏழாவது, கூடாரப்பண்டிகை **(Feast of Tabernacle)**. மொத்தம் ஏழு பண்டிகைகள் என்று லேவியராகமம் 23ம் அதிகாரத்தில் எழுதியிருக்கிறது. அங்கே, ஏழு பண்டிகைகள் என்று எழுதியிருக்கிறது. இங்கே ஏழு சபைக்காலங்கள் என்று இருக்கிறது. ஏழு சபைக்காலங்கள் எங்கே வருகிறது? அது பெந்தெகொஸ்தே பண்டிகையிலே வருகிறது. இந்த சபைக்காலத்தின் முடிவிலே எடுத்துக்கொள்ளப்படுதல் **(Rapture)** நடக்கும் என்று நாம் அறிந்திருக்கிறோம்.

அடுத்ததாக, ஐந்தாவது முத்திரை. வெளிப்படுத்தல் 6: 9-11 வரை நாம் ஐந்தாம் முத்திரையைக் குறித்து வாசிக்கிறோம்.

**வெளிப்படுத்தல் 6: 9-11**

9. அவர் ஐந்தாம் முத்திரையை உடைத்தபோது, தேவவசனத்தினிமித்தமும் தாங்கள் கொடுத்த சாட்சியினிமித்தமும் கொல்லப்பட்டவர்களுடைய ஆத்துமாக்களைப் பலிபீடத்தின்கீழே கண்டேன்.

10. அவர்கள்: பரிசுத்தமும் சத்தியமுமுள்ள ஆண்டவரே, தேவரீர் பூமியின்மேல் குடியிருக்கிறவர்களிடத்தில் எங்கள் இரத்தத்தைக்குறித்து எதுவரைக்கும் நியாயத்தீர்ப்புச்செய்யாமலும் பழிவாங்காமலும் இருப்பீர் என்று மகா சத்தமிட்டுக் கூப்பிட்டார்கள்.
11. அப்பொழுது அவர்கள் ஒவ்வொருவருக்கும் வெள்ளை அங்கிகள் கொடுக்கப்பட்டது; அன்றியும், அவர்கள் தங்களைப்போலக் கொலைசெய்யப்படப்போகிறவர்களாகிய தங்கள் உடன்பணிவிடைக்காரரும் தங்கள் சகோதரருமானவர்களின் தொகை நிறைவாகுமளவும் இன்னுங்கொஞ்சக்காலம் இளைப்பாறவேண்டும் என்று அவர்களுக்குச் சொல்லப்பட்டது.

ஐந்தாம் முத்திரையில், பலிபீடத்தின்கீழ் உள்ள ஆத்துமாக்களைக் குறித்து எழுதப்பட்டிருக்கிறது. இங்கே ஜீவன்கள் இல்லை. ஜீவன்கள் முதல் நாலு முத்திரைகளோடு முடிந்துவிட்டது. இவர்கள், தேவவசனத்தினிமித்தமும் தாங்கள் கொடுத்த சாட்சியினிமித்தமும் கொல்லப்பட்டவர்கள். இயேசுகிறிஸ்துவின் சாட்சி என்று சொல்லப்படாமல், தாங்கள் கொடுத்த சாட்சி என்று சொல்லப்பட்டிருக்கிறது **(Not the testimony of Jesus, but the testimony which they held)**. தேவனுடைய வார்த்தையினிமித்தம் கொல்லப்பட்டார்கள் **(slain for the Word of God)**. அவர்கள் யார்? அவர்கள் மகா சத்தமிட்டுக் கூப்பிட்டார்கள். எதற்காகக் கூப்பிட்டார்கள்? பழிவாங்குவதற்காக. "பூமியின்மேல் குடியிருக்கிறவர்களிடத்தில் எங்கள் இரத்தத்தைக்குறித்து எதுவரைக்கும் நியாயத்தீர்ப்புச்செய்யாமலும் பழிவாங்காமலும் இருப்பீர் என்று மகா சத்தமிட்டுக் கூப்பிட்டார்கள்". "நீர் நியாயத்தீர்ப்பு கொடுக்கவேண்டும். நாங்களெல்லாம் அநியாயமாய்க் கொல்லப்பட்டிருக்கிறோம். யூதர்கள் தேவனுடைய ஜனங்கள் என்பதற்காக எங்களைக் கொலைசெய்திருக்கிறார்கள். நாங்கள் இப்பொழுது பலிபீடத்தின்கீழ் இருக்கிறோம். எதுவரைக்கும் நீர் நியாயத்தீர்ப்புச்செய்யாமல் இருப்பீர், பழிவாங்காமல் இருப்பீர்" என்று அவர்கள் சொல்லும்பொழுது, தங்கள் விரோதிகளின்மேல் பழிவாங்கவேண்டும் என்று கூப்பிடுகிறார்கள்.

யார் பழிவாங்குவார்? கர்த்தர் அவர்கள் விரோதிகளைப் பழிவாங்குவார் **(They are crying out for revenge and God will bring revenge upon their enemies)**. பழிவாங்கவில்லை என்றால் நீதி, நியாயம் தெரியாமல்போய்விடும். ஒரு பெண்ணை ஒருவன் மானபங்கம்

செய்யும்போது, அவனைக் கொல்லவேண்டும், தூக்கில் போடவேண்டும். அப்பொழுதுதான் அந்த பெற்றோர்களுக்கு திருப்தி வரும். ஏனென்றால், நீதி செலுத்தப்படவேண்டும். நாம் செய்தித்தாளில் அப்படி வாசிக்கிறோம். யாராவது ஒருத்தர் தீமை செய்தால் அவர்களை பழிவாங்கவேண்டும், தண்டிக்கவேண்டும். அதற்காகத்தான் நீதிமன்றங்கள் இருக்கிறது. ஆனால் நாம் என்ன செய்கிறோம் என்றால், கர்த்தர் எல்லாவற்றிற்கும் பழிவாங்குவார் என்று விசுவாசிக்கிறோம். ஏனென்றால் நமக்குள் கிறிஸ்துவின் ஆவி **(Christ's Spirit)** இருக்கிறது. அல்லேலூயா. பழிவாங்கவேண்டும் என்று சொல்லி நாம் கூப்பிடவில்லை. ஆண்டவர் அவர்களைப் பழிவாங்குவார். நாம் அதை அப்படியே விட்டுவிட வேண்டியதுதான். பழிவாங்குதல் கர்த்தருக்கு உரியது. "ஆண்டவரே அவர்கள் மத்தியில் நாங்கள் வெட்கப்பட்டுப்போகாமல் இருக்க உதவிசெய்யும், எங்களை ஆசீர்வதியும்" என்றுதான் நான் ஜெபம்பண்ணுவேன்.

இப்பொழுது ஸ்தேவானை **(Stephen)** நாம் பார்க்கும்பொழுது, அவனைக் கல்லெறிந்துக் கொன்றார்கள். ஆனால் அவன் பழிவாங்கும்படி கூப்பிடவில்லை. அவனுக்குக் கிறிஸ்துவின் ஆவி இருந்தது. அல்லேலூயா. இயேசுகிறிஸ்துவைப்பற்றிய சாட்சி இருந்தது. இவர்களுக்கு இயேசிகிறிஸ்துவைப்பற்றிய சாட்சி இல்லை. இயேசுவின் இரத்தம் தெளிக்கப்படுதலின் கீழ் அவர்கள் இல்லாததினால் **(Their hearts were not sprinkled by the blood of Jesus Christ)**, பழைய ஏற்பாட்டில் யூதர்கள் எப்படி இருந்தார்களோ அதைப்போலவே பழிவாங்குவதற்காகக் கூப்பிடுகிறார்கள். ஸ்தேவான் என்ன சொல்லுகிறான்?

**<u>அப்போஸ்தலர் 7: 60</u>**

60. அவனோ, முழங்காற்படியிட்டு: ஆண்டவரே, இவர்கள்மேல் இந்தப் பாவத்தைச் சுமத்தாதிரும் என்று மிகுந்த சத்தமிட்டுச் சொன்னான். இப்படிச் சொல்லி, நித்திரையடைந்தான்.

அவனைக் கல்லெறிந்துக் கொல்லும்போது, "இவர்கள்மேல் இந்த பாவத்தைச் சுமத்தாதிரும், கர்த்தராகிய இயேசுவே உம்முடைய கையில் என் ஆவியை ஒப்புக்கொடுக்கிறேன்" என்று ஜெபம்பண்ணினான். அது என்ன? அவனுடைய இருதயத்தில் இயேசுவின் இரத்தம் தெளிக்கப்பட்டிருந்தது. அல்லேலூயா. இயேசுவின் இரத்தம்

தெளிக்கப்படாதவர்கள் பழிவாங்குவார்கள். இயேசுவின் இரத்தம் தெளிக்கப்பட்டவர்கள் பழிவாங்குதலைக் கர்த்தருக்கு விட்டுவிடுவார்கள். அவர் நீதியுள்ள நியாயாதிபதி, அவர் நிச்சயமாக பழிவாங்குவார். நமக்காகப் பழிவாங்குவார். ஆனால் நாம் பழிவாங்கும்படியாகக் கேட்கக்கூடாது.

இவர்கள் பழிவாங்கும்படியாகக் கூப்பிடுகிறார்கள். இவர்கள் யார்? யூதர்கள் **(Jews)**. கிறிஸ்தவர்கள் அல்ல. யூதர்கள். அவர்களுக்கு ஒரு உபத்திரவம் **(Tribulation)** வந்தது. உபத்திரவம் என்று சொல்லும்போது, இரண்டு உபத்திரவங்கள் இருக்கிறது. முதலாவது, குறைவான உபத்திரவம் **(Amateur Tribulation)**, அதன்பின்பு மிகுந்த உபத்திரவம் **(Great Tribulation)**. நமக்கும் இப்பொழுது சிறிய உபத்திரவம் **(Squeeze)** இருக்கிறது. அதன்பின்பு, உலகத்தில் மகா உபத்திரவகாலம் வரும். இப்படி வேதச் சொற்கள் **(Bible Terms)** இருக்கிறது. சகோ. பிரன்ஹாம் இவ்விதமான சொற்களை பயன்படுத்தியிருக்கிறார். அவர்களுக்கு ஐந்தாம் முத்திரையிலே உபத்திரவம் வந்தது. அது கொஞ்சகாலம் இருந்த உபத்திரவம். ஆறு கோடியே எண்பது இலட்சம் **(68 million)** கிறிஸ்தவர்கள் தியத்தீரா சபைக்காலத்தில் கொல்லப்பட்டார்கள். அது சிறிய உபத்திரவம். ஆனால் மகா உபத்திரவம் வரும்போது நாம் அதில் இருக்கமாட்டோம். அல்லேலூயா. புத்தியில்லாத கன்னிகைகள் அங்கே கொல்லப்படுவார்கள்.

யூதர்களுக்கு கொஞ்சக்கால உபத்திரவம் வந்தது. ஹிட்லர் **(Hitler)**, முசோலினி **(Mussolini)**, ஸ்டாலின் **(Stalin)**, எய்க்மேன் **(Eichmann)** போன்ற கொடுங்கோல் மன்னர்கள் அவர்களைக் கொன்றார்கள். ஹிட்லர், ஆறு இலட்சம் யூதர்களை விஷவாயு செலுத்திக் கொன்றான். இவ்விதமாக படுகொலை செய்யப்பட்டார்கள். கிறிஸ்தவர்கள் அநேக நாடுகளில் கொல்லப்பட்டார்கள். இதெல்லாம் கொஞ்சக்கால உபத்திரவம். ஆனால் மணவாட்டி எடுத்துக்கொள்ளப்பட்டப் பின்பு மிகுந்த உபத்திரவம் வரப்போகிறது. உலகமுண்டானதுமுதல் இதுவரைக்கும் சம்பவித்திராத மகா உபத்திரவமாய் அது இருக்கும்.

**மத்தேயு 24: 21**

21. ஏனெனில், உலகமுண்டானதுமுதல் இதுவரைக்கும் சம்பவித்திராததும், இனி மேலும் சம்பவியாததுமான மிகுந்த உபத்திரவம் அப்பொழுது உண்டாயிருக்கும்.

இதுவரைக்கும் வந்த உபத்திரவமெல்லாம் ஒரு அளவுக்கு பெரிய உபத்திரவம்தான். அநேகர் கொல்லப்பட்டார்கள். ஆனால் அதைவிட அதிக உபத்திரவம் உலகத்திற்கு இனிமே வரப்போகிறது. நீங்கள் அதில் சிக்கிக்கொள்ளக் கூடாதென்பதற்காகத்தான் கர்த்தர் நமக்கு ஒரு தீர்க்கதரிசி மூலமாக செய்தியை அனுப்பியிருக்கிறார். ஒரு போதகர் அதைப் பகுத்துப் போதிக்கும்படி செய்கிறார். நீங்கள் விசுவாசித்தாலும், விசுவாசிக்காவிட்டாலும் கீழ்ப்படியாத ஆத்துமாக்கள் அங்கேபோய் சேர்வார்கள். ஒருவேளை நம்முடைய பிள்ளைகள் கீழ்ப்படியவில்லையென்றால் அங்கேபோய் சிக்கிக்கொள்வார்கள். நல்ல மாதிரி கீழ்ப்படிந்து ஆவிக்குரிய பிரகாரமாக இருந்தால் அங்கேபோய் சிக்கமாட்டோம். பிரசங்கம் என்பது எதையோ ஒன்றைச் சொல்லவேண்டும் என்பதற்காக அல்ல. இது நடக்கப்போகிற காரியம். அல்லேலூயா.

எக்காளப் பண்டிகை **(Feast of Trumpet)** இஸ்ரவேல் ஜனங்களைத் தங்கள் சொந்த தேசத்தில் கூட்டிச்சேர்க்கிறது. இப்பொழுது எக்காளப் பண்டிகை நடந்துகொண்டிருக்கிறது. 1948ல் இருந்து இன்றைக்கு 2016 வரைக்கும் யூதர்கள் தங்கள் சொந்த தேசத்தில் கூட்டிச்சேர்க்கப்படுகிறார்கள். நகோமி தன்னுடைய சொந்த தேசத்திற்கு வந்திருக்கிறாள். பெத்லெகேமுக்கு வந்திருக்கிறாள். அல்லேலூயா. கடந்த வாரத்தில் அதைக் குறித்து விளக்கமாகச் சொல்லியிருக்கிறேன். நகோமி தன்னுடைய சொந்த தேசத்திற்கு வருவது எதைக் குறிக்கிறது? 1,44,000 பேர் தங்கள் சொந்த தேசத்தில் இருக்கிறார்கள். மகா உபத்திரவகாலத்தில் அவர்கள் கொலை செய்யப்படுவார்கள். **“அவர்கள் ஒவ்வொருவருக்கும் வெள்ளை அங்கிகள் கொடுப்பட்டது”** என்று சொல்லியிருக்கிறது. அதுமாத்திரமல்ல, “அன்றியும், அவர்கள் தங்களைப்போலக் கொலைசெய்யப்படப்போகிறவர்களாகிய தங்கள் உடன்பணிவிடைக்காரரும் தங்கள் சகோதரருமானவர்களின் தொகை நிறைவாகுமளவும் இன்னுங்கொஞ்சக்காலம் இளைப்பாறவேண்டும் என்று அவர்களுக்குச் சொல்லப்பட்டது”. “நீங்கள் கொஞ்சக்கால உபத்திரவத்தில் **(Amateur Tribulation)** சிக்கி அநியாயமாய் கொல்லப்பட்டிருக்கிறீர்கள். கடைசி உயிர்த்தெழுதலில் உங்களுக்கு நித்தியஜீவன் உண்டு. **(**வெள்ளை அங்கிகள் நித்தியஜீவனுக்கு அடையாளமாய் இருக்கிறது**)**. உங்களுக்கு இயேசுகிறிஸ்துவைப்பற்றிய சாட்சி இல்லையென்றாலும், நீங்கள் தேவனுடைய ஜனங்கள் என்ற காரணத்தால் அநியாயமாய்க் கொல்லப்பட்டபடியினால் உங்களுக்கு நித்தியஜீவன் உண்டு. ஆனாலும்

நீங்கள் காத்திருக்கவேண்டும். எனென்றால், மகா உபத்திரவம் **(Great Tribulation)** வருகிறது. அதிலே, உங்கள் சகோதரர்களாகிய 1,44,000 பேரும் கொல்லப்படவேண்டும். அதுவரைக்கும் நீங்கள் காத்திருக்கவேண்டும்" என்று அவர்களுக்குச் சொல்லப்பட்டது. இதுதான் ஐந்தாம் முத்திரை.

ஆண்டவர் இப்பொழுது அவர்களுக்கு நித்தியஜீவனை அளித்துவிட்டார். ஆனால் இன்னும் ஆறாம் முத்திரை வரவில்லை. இந்த ஐந்தாம் முத்திரைக்கும் **(Fifth Seal)** ஆறாம் முத்திரைக்கும் **(Sixth Seal)** மத்தியில் எடுத்துக்கொள்ளப்படுதல் **(Rapture)** நடக்கவேண்டும். ஐந்தாம் முத்திரை எக்காளப் பண்டிகையாக **(Feast of Trumpet)** இருக்கிறது. ஆறாம் முத்திரை பாவநிவிர்த்தி பண்டிகையாக **(Feast of Atonement)** இருக்கிறது. உபத்திரவகாலத்தில் 1,44,000 பேர் இயேசுவே மேசியா, இயேசுவே கர்த்தர், இயேசுதான் நம்மை இரட்சிக்க வந்தார், அவரை நாம் கொலைசெய்துவிட்டோம் என்று நினைக்கப்போகிறார்கள். எப்பொழுது? மகா உபத்திரவகாலத்தில். அந்த மகா உபத்திரவகாலந்தான் ஆறாம் முத்திரையாக இருக்கிறது.

எக்காளப் பண்டிகைக்குப் பின்பு நமக்கு எடுத்துக்கொள்ளப்படுதல் இருக்கிறது. எடுத்துக்கொள்ளப்படுதலுக்குப் பின்பு பாவநிவிர்த்தி பண்டிகை வருகிறது. அப்பொழுது அவர்கள் பலியை நினைவுகூருகிறார்கள். இயேசு தங்களுக்காக பலியானார் என்பதை நினைவுகூருகிறார்கள். அது ஆறாம் முத்திரை. ஆறாம் முத்திரையின் காலமானது ஆறாம் எக்காளமாக இருக்கிறது. ஆறாம் முத்திரையிலே ஆறாம் எக்காளம் இருக்கிறது. ஆறாம் எக்காளம் எது? பாவநிவிர்த்தி பண்டிகை. இயேசுவை புறக்கணித்தவர்கள் அப்பொழுது இயேசுவை நினைத்து அழுவார்கள், புலம்புவார்கள். சகோதரர்கள் யோசேப்பைப் புறக்கணித்தார்கள், அவனை விற்றுப்போட்டார்கள். பின்பு அவனைப் பார்த்து அழுகிறார்கள். யோசேப்பு வெளிப்படுத்தவில்லையென்றால் அவர்களுக்குத் தெரியுமா? தெரியாது. அதைப்போலவே, இரண்டு சாட்சிகள் மோசேயும் எலியாவும் **(Moses & Elijah Anointing)** வந்து, மகா உபத்திரவகாலத்தில், தானியேலின் எழுபதாவது வாரத்தின் இரண்டாவது பகுதியில் **(Second three & half years in Daniel's Seventieth Week)** அவர்களுக்கு இயேசுகிறிஸ்துவைக் குறித்து வெளிப்படுத்தும்போது, அவர்கள், "இயேசுவை சிலுவையில் அறைந்தது நாங்கள்தான், நாங்கள் தவறு செய்துவிட்டோம்" என்று இயேசுவை கண்டுகொள்கிறார்கள் **(They will recognize Jesus)**. அது எங்கே இருக்கிறது?

நான் சொல்லுகிறதெல்லாம் உங்களுக்கு வேதம் நன்றாகத் தெரிந்திருந்தால் குழப்பமாக இருக்காது. உங்களுக்குத் தெளிவாக இருக்கும். அது **வெளிப்படுத்தல் 6: 12 – 17** வசனங்களில் இருக்கிறது.

12. அவர் ஆறாம் முத்திரையை உடைக்கக்கண்டேன்; இதோ, பூமி மிகவும் அதிர்ந்தது; சூரியன் கறுப்புக் கம்பளியைப்போலக் கறுத்தது; சந்திரன் இரத்தம் போலாயிற்று.
13. அத்திமரமானது பெருங்காற்றினால் அசைக்கப்படும்போது, அதின் காய்கள் உதிருகிறதுபோல, வானத்தின் நட்சத்திரங்களும் பூமியிலே விழுந்தது.
14. வானமும் சுருட்டப்பட்ட புஸ்தகம் போலாகி விலகிப்போயிற்று; மலைகள் தீவுகள் யாவும் தங்கள் இடங்களைவிட்டு அகன்றுபோயின.
15. பூமியின் ராஜாக்களும், பெரியோர்களும், ஐசுவரியவான்களும், சேனைத்தலைவர்களும், பலவான்களும், அடிமைகள் யாவரும், சுயாதீனர் யாவரும், பர்வதங்களின் குகைகளிலும் கன்மலைகளிலும் ஒளித்துக்கொண்டு,
16. பர்வதங்களையும் கன்மலைகளையும் நோக்கி: நீங்கள் எங்கள்மேல் விழுந்து, சிங்காசனத்தின்மேல் வீற்றிருக்கிறவருடைய முகத்திற்கும், ஆட்டுக்குட்டியானவருடைய கோபத்திற்கும் எங்களை மறைத்துக்கொள்ளுங்கள்;
17. அவருடைய கோபாக்கினையின் மகாநாள் வந்துவிட்டது, யார் நிலைநிற்கக்கூடும் என்றார்கள்.

இதுதான் ஆறாம் முத்திரை. ஆறாம் எக்காளமாகவும் இருக்கிறது. உபத்திரவகாலமாக **(Period of Tribulation)** இருக்கிறது. இயற்கையின் பாதிப்புகள் **(Natural disturbances)** அங்கே இருக்கிறது. 1,44,000 பேர் கொலை செய்யப்படுவார்கள். புத்தியில்லாத கன்னிகைகள் **(Foolish Virgins)** கொலை செய்யப்படுவார்கள். அவர்கள் மகா உபத்திரவகாலத்தில்போய் சிக்கிக்கொள்வார்கள். எடுத்துக்கொள்ளப்படுதலில் போகவில்லையென்றால் அங்கேபோய்தான் சிக்கவேண்டும். அது நம்முடைய பிள்ளைகளாய் இருந்தாலும், நம்முடைய குடும்பத்தாராய் இருந்தாலும், யாராயிருந்தாலும் எடுத்துக்கொள்ளப்படுதலில் பங்குபெறவில்லையென்றால், அங்கேபோய்தான் சிக்கவேண்டும். சத்தியம் உங்களுக்கும், எனக்கும், எல்லாருக்கும் ஒன்றுதான். அதில் பட்சபாதம் இல்லை.

ஐந்தாம் முத்திரைக்கும், ஆறாம் முத்திரைக்கும் இடையில் ஒரு அமைதல் **(Silence)** இருக்கிறது. அந்த அமைதலில் எடுத்துக்கொள்ளப்படுதல் நடக்கிறது. அதன்பின்பு, மகா உபத்திரவகாலம் **(Great Tribulation)** வருகிறது. அந்திக்கிறிஸ்துவின் **(Antichrist)** காலம் வருகிறது. அந்திக்கிறிஸ்துவின் முடிவுகாலத்தில் பூமி மிகவும் அதிரும்.

ஆறாம் முத்திரை **(Sixth Seal)**, ஒரு பூமியதிர்ச்சி மூலமாகத்தான் ஆரம்பமாகிறது. லாஸ் ஏஞ்சலஸ் **(Los Angeles)** பூமியதிர்ச்சி ஏற்படும்போது அது துவங்குகிறது. அப்பொழுது எடுத்துக்கொள்ளப்படுதல் **(Rapture)** நடக்கிறது. ஆறாம் முத்திரை துவங்குகிறது. ஆறாம் முத்திரை திறக்கப்படவேண்டும் என்றால், பெரிய பூமியதிர்ச்சி ஏற்பட்டு, அமெரிக்காவின் மேற்கு கடற்கரையில் உள்ள கலிபோர்னியா **(California)** மாகாணத்தில் உள்ள, இரண்டாவது பாபிலோனாகிய ஹாலிவுட் **(Hollywood)**, லாஸ் ஏஞ்சலஸ் **(Los Angeles)**, சான் பிரான்சிஸ்கோ **(San Francisco)** போன்ற பட்டணங்கள் தண்ணீருக்குள் போகவேண்டும். உபத்திரவகாலம் முடியும்போது, சூரியன் கறுத்த கம்பளியைப்போல மாறும். சந்திரன் இரத்தமாக மாறும். வானத்தின் நட்சத்திரங்கள் பூமியில் விழும். அப்பொழுது அதிக அளவில் இயற்கையின் பாதிப்புக் காணப்படும்.

மிருகத்தின் முத்திரையைத் **(Mark of the Beast)** தரிக்காத 1,44,000 பேர் அந்திக்கிறிஸ்துவால் **(Antichrist)** கொலை செய்யப்படுவார்கள். செய்தியில் இருந்தும் கைவிடப்பட்ட புத்தியில்லாத கன்னிகைகள் **(Foolish Virgins)**, எதாவது அரசாங்க சலுகைகள் கிடைக்குமென்று மிருகத்தின் முத்திரையைத் தரித்துக்கொண்டால், தற்காலிகமாகப் பிழைத்துக்கொள்ளலாம். ஆனால் கடைசியில் அர்மெகெதோன் **(Armageddon)** யுத்தத்தில் அழியவேண்டும். ஆனால் “எதுவும் எனக்கு வேண்டாம், நான் மிருகத்தின் முத்திரையைத் தரிக்கமாட்டேன்” என்று சொன்னால், இரத்தசாட்சியாக மரிக்கவேண்டும். ஆனால் கடைசி உயிர்த்தெழுதலில் நித்தியஜீவனைப் பெறலாம். இதெல்லாம் வீணாக எழுதிவைக்கப்படவில்லை, நான் வீணாகச் சொல்லவில்லை. நிச்சயமாக நடக்கப்போகிறது. நீங்கள் அதில்போய் சிக்கிக்கொள்ளாதேயுங்கள். வாலிப சகோதர, சகோதரிகள் யாரும்போய் அப்படிச் சிக்கிக்கொள்ளாதீர்கள். இவ்வளவுகாலம் எப்படியிருந்தாலும், இனியாவது ஒழுங்காக இருங்கள். காலம் கடைசியாகிவிட்டது. அல்லேலூயா. இயேசுவின் இரத்தம் இருக்கிறது **(Blood of Jesus is available)**. நாம் குறைகளை அறிக்கைச் செய்தால் அவர் மன்னிக்கிறார். ஆனால் எப்பொழுதும் இரத்தம் இருக்கும் என்று நினைக்கக்கூடாது.

அதன்பின்பு, வெளிப்படுத்தல் ஏழாம் அதிகாரம் முதல் நான்கு வசனங்களை வாசிக்கும்பொழுது,

1. இவைகளுக்குப்பின்பு, பூமியின் நான்கு திசைகளிலும் நான்கு தூதர்கள் நின்று, பூமியின்மேலாவது, சமுத்திரத்தின்மேலாவது, ஒரு மரத்தின்மேலாவது, காற்று அடியாதபடிக்கு, பூமியின் நான்கு காற்றுகளையும் பிடித்திருக்கக்கண்டேன்.
2. ஜீவனுள்ள தேவனுடைய முத்திரைக்கோலையுடைய வேறொரு தூதன் சூரியன் உதிக்குந்திசையிலிருந்து ஏறிவரக்கண்டேன்; அவன், பூமியையும் சமுத்திரத்தையும் சேதப்படுத்துகிறதற்கு அதிகாரம் பெற்ற அந்த நான்கு தூதரையும் நோக்கி:
3. நாம் நமது தேவனுடைய ஊழியக்காரரின் நெற்றிகளில் முத்திரைபோட்டுத் தீருமளவும் பூமியையும் சமுத்திரத்தையும் மரங்களையும் சேதப்படுத்தாதிருங்கள் என்று மகா சத்தமிட்டுக் கூப்பிட்டான்.
4. முத்திரைபோடப்பட்டவர்களின் தொகையைச் சொல்லக்கேட்டேன்; இஸ்ரவேல் புத்திரருடைய சகல கோத்திரங்களிலும் முத்திரைபோடப்பட்டவர்கள் இலட்சத்து நாற்பத்து நாலாயிரம்பேர்.

காற்று எதைக்குறிக்கிறது? யுத்தத்தையும் சண்டையையும் **(Wars & Strifes)** குறிக்கிறது. பூமியின்மேல் வீசாதபடி நான்கு திசைகளிலும் நான்கு காற்றுகளைப் பிடித்துகொண்டிருக்கும்பொழுது, ஜீவனுள்ள தேவனுடைய முத்திரைக்கோலையுடைய வேறொரு தூதன் சூரியன் உதிக்குந்திசையிலிருந்து ஏறிவருகிறார். இயேசுகிறிஸ்து, எப்பொழுதும் கிழக்கில் இருந்துதான் வருகிறார். கிழக்கு கர்த்தருடைய வருகையைக் **(Coming of the Lord)** குறிக்கிறது. தேவனுடைய முத்திரை எதைக்குறிக்கிறது? பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தைக் **(Baptism of the Holy Ghost)** குறிக்கிறது. அல்லேலூயா. யார் பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தைக் கொடுக்கமுடியும்? இயேசுகிறிஸ்து மாத்திரம்தான் கொடுக்கமுடியும். எத்தனைப்பேர் விசுவாசிக்கிறோம்? "நான் ஜலத்தினால் உங்களுக்கு ஞானஸ்நானங் கொடுக்கிறேன்; எனக்குப்பின் வருகிறவரோ என்னிலும் வல்லவராயிருக்கிறார், அவருடைய பாதரட்சைகளைச் சுமக்கிறதற்கு நான் பாத்திரன் அல்ல; அவர் பரிசுத்த ஆவியினாலும் அக்கினியினாலும் உங்களுக்கு ஞானஸ்நானம் கொடுப்பார்" என்று யோவான் ஸ்நானன் சொல்லுகிறான். அப்படியென்றால், சூரியன் உதிக்குந்திசையிலிருந்து வருகிற தூதன் யார்? கர்த்தராகிய இயேசுகிறிஸ்து. ஆமென். ஆனால், அங்கே என்ன சொல் போடப்பட்டிருக்கிறது? தூதன் **(Angel)** என்று எழுதியிருக்கிறது. அவர் நான்கு தூதரையும் பார்த்து, "நாம் நமது தேவனுடைய ஊழியக்காரரின் நெற்றிகளில் முத்திரைப்போட்டுத் தீருமளவும் பூமியையும் சமுத்திரத்தையும் மரங்களையும் சேதப்படுத்தாதிருங்கள்" என்று சொல்லுகிறார். 1,44,000 இஸ்ரவேலர்கள் பரிசுத்த ஆவியினால் முத்திரிக்கப்படுகிறார்கள்.

இதில் யுத்தங்கள் அடங்கியிருக்கிறது. முதலாம் வசனத்தில் முதலாம் உலக யுத்தம் **(I World War)** இருக்கிறது.

1. இவைகளுக்குப்பின்பு, பூமியின் நான்கு திசைகளிலும் நான்கு தூதர்கள் நின்று, பூமியின்மேலாவது, சமுத்திரத்தின்மேலாவது, ஒரு மரத்தின்மேலாவது, காற்று அடியாதபடிக்கு, பூமியின் நான்கு காற்றுகளையும் பிடித்திருக்கக்கண்டேன்.

"நான் முத்திரைப்போட்டுத் தீருமளவும் அந்த காற்று வீசாதபடி பிடியுங்கள்" என்று அந்த தூதன் சொல்லுகிறார். அது எதைக் குறிக்கிறது? முதலாம் உலக யுத்தம் **(I World War)**. முதலாம் உலக யுத்தம் மர்மமான முறையிலே நின்றுபோயிற்று. அது எப்படி நின்றது என்று யாருக்கும் இதுவரைக்கும் தெரியாது. **(I World War was stopped mysteriously. Nobody knew how it stopped even until now)**. உங்களுக்கும் எனக்கும் தெரியும். அல்லேலூயா. வேறே யாருக்கும் தெரியாது. உலகத்திலே யாருக்கும் தெரியாது. எந்த பெரிய பதவியில் இருக்கிறவர்களுக்கும் தெரியாது. உங்களுக்கும் எனக்கும் ஆண்டவர் வெளிப்படுத்தியிருக்கிறார். அல்லேலூயா. ஜெர்மனியின் சக்கரவர்த்தியாகிய கெய்ஸர் வில்ஹெல்ம் **(German Emperor Kaiser Wilhelm)**, இங்கிலாந்து மன்னரிடம், "யுத்தத்தை நிறுத்தும்படி நீங்கள் கட்டளைப் பிறப்பித்தீர்களா?" என்று கேட்டார். இங்கிலாந்து மன்னர் கட்டளைக் கொடுக்கவில்லை. யுத்தம் எப்படி நின்றதென்று யாருக்கும் தெரியவில்லை. யார் நிறுத்தச் சொன்னது? சூரியன் உதிக்குந்திசையிலிருந்து வந்த அந்தத் தூதன், அந்தக் காற்றைப் பிடித்திருக்கும்படி அந்த நான்கு தூதர்களைப் பார்த்துச் சொன்னார். அல்லேலூயா. யுத்தம் சரியாக 11ம் மாதம், 11ந் தேதி, 11 மணிக்கு திடீரென்று நின்றுபோயிற்று **(It stopped the 11$^{th}$ hour, 11$^{th}$ day of the 11$^{th}$ month in 1918)**.

முதலாம் உலக யுத்தத்தில் விஷவாயுக்களை உபயோகப்படுத்தினார்கள். குளோரின் வாயு **(Chlorine gas)**, கடுகுவளி **(Mustard gas)** போன்ற விஷத்தன்மையுள்ள வாயுக்களால் அநேகர் செத்துப்போனார்கள். மரங்கள், புல்லெல்லாம் எரிந்துப்போனது. இங்கிலாந்து தளபதி, ஈஸ்டர் காலையில் **(Easter Morning)**, அங்கே போய்ப் பார்க்கும்பொழுது, எல்லாமே எரிந்துப்போயிருந்தது. அந்த இராணுவத்தில் போதகரும் **(Chaplain)** இருப்பார். அவரும் போய்ப் பார்க்கும்பொழுது, அவர் கண் பார்த்தத் தூரம்வரை எல்லாம் எரிந்து கிடந்தது. ஜீவராசியே இல்லை.

எல்லா இடத்திலும் மரணம்தான். சகோ. பிரன்ஹாம் அதைப்பற்றி, **“மறுரூபப்படுத்தும் தேவனுடைய வல்லமை” (God’s Power To Transform)** என்ற செய்தியில் சொல்லுகிறார். முதலாம் உலக யுத்தம் **1914-1918** வரை பயங்கரமாக நடந்திருக்கிறது. அப்பொழுது அந்த போதகர் அழுதுகொண்டே திரும்பும்போது ஒரு பாறை **(Rock)** அவர் கவனத்தை ஈர்த்தது. அவர் அந்தப் பாறையைத் தள்ளும்போது, அதற்கு அடியில் ஒரு சின்ன வெள்ளைப் பூ இருந்தது. மீந்திருந்த ஒரே ஜீவராசி அதுதான். அது அந்தப் பாறையின் அடியில் பாதுகாப்பாக இருந்ததால் அது தப்பித்துக்கொண்டது **(Under the rock was laying an Easter flower sheltered during the war)**. அந்த ஈஸ்டர் அன்று, அது உயிர்த்தெழுதலுக்கு ஒரு சாட்சியாக அங்கே இருந்தது என்று சகோ. பிரன்ஹாம் சொல்லுகிறார்.

முதலாம் உலக யுத்தம் **1914-1918** வரை நடந்தது. அதுதான் பெந்தெகொஸ்தே பண்டிகையின் முடிவு **(The end of the Feast of Pentecost)**. நாலாவது பண்டிகை, பெந்தெகொஸ்தே பண்டிகை. அந்தப் பண்டிகை நான்கு மாதங்கள் இருக்கிறது. முதலாம் உலக யுத்தம் வரும்போது, பெந்தெகொஸ்தே எழுப்புதல் இருக்கிறது. 1906 வருடம் பெந்தெகொஸ்தே எழுப்புதல் தோன்றினது. மூன்று வருடங்கள் கழித்து, 1909 வருடம், ஏப்ரல் 6ந் தேதியிலே சகோ. பிரன்ஹாம் பிறந்தார் **(Bro. Branham was born three years after the revival broke out in Azusa Street)**. சகோ. பிரன்ஹாமுக்கு ஏழு வயதாகும்போது முதலாம் உலக யுத்தம் நடந்துகொண்டிருக்கிறது. எதற்காக நான் இதைச் சொல்லுகிறேன் என்பதை கவனியுங்கள். அவருக்கு ஏழு வயதாகும்போது 1916 வருடம். அப்பொழுது உலக யுத்தம் நடந்துகொண்டிருக்கிறது. அவர் தாயார் ஒரு வாளியில் தண்ணீர் கொண்டுவரச் சொன்னார்கள். கொண்டுவரும்போது, பளு சற்று அதிகமாக இருந்ததால், ஒரு மரத்தின்கீழ் சற்று இளைப்பாற நின்றார். அப்பொழுது புயல் காற்றுத் தோன்றி அந்த மரத்தை அசைத்தது. அதிலிருந்து என்ன சத்தம் வந்தது? “நீ புகைப்பிடிக்காதே, குடிக்காதே. நீ உன் சரீரத்தை எந்தவிதத்திலும் கெடுத்துக்கொள்ளாதே. நீ பெரியவனாகும்போது உனக்கு ஒரு ஊழியம் இருக்கிறது” **(Don’t drink, or smoke or defile yourself in anyway. I have a work for you to do when you get older)**. இயேசுகிறிஸ்து, தீர்க்கதரிசிக்குத் தனிப்பட்ட பிரகாரமாகச் சொன்னார். இன்றைக்கும் அவர் அதைத்தான் சொல்லுகிறார். அப்படி யாராவது செய்தால், அவர்கள் இராப்போஜனத்தில் பங்குபெறக்கூடாது.

இப்பொழுது, அவர் இன்னும் பெரியவனாக மாறவில்லை. என்ன வேலை இருக்கிறது என்றும் ஆண்டவர் அவருக்குச் சொல்லவில்லை. ஆனால் "நீ பெரியவனாகும்போது உனக்கு ஒரு வேலை இருக்கிறது. அதற்கு உன்னை ஆயத்தப்படுத்துவதற்கு நீ இவ்விதமானப் பாவத்தில்போய் சிக்கிக்கொள்ளக்கூடாது" என்று சொன்னார். எடுத்துக்கொள்ளப்படுதலில் போகவேண்டுமென்றால், கர்த்தருடைய ஆசீர்வாதத்தைப் பெறவேண்டுமென்றால், எந்தவிதமான புறம்பான பாவத்திலும் சிக்கிக்கொள்ளக்கூடாது. வெளியரங்கமான பாவத்தில் சிக்கிக்கொள்ளாதே என்று வாலிபர்களுக்கு ஆண்டவர் சொல்லுகிறார். ஞாயிறு பள்ளியில் இருக்கும் பிள்ளைகளுக்கும் சொல்லுகிறார்.

இப்பொழுது, 1916ம் வருடத்தில் ஆண்டவர் சொன்னார். அதே தூதனானவர்தான் **(Angel)** இரண்டு வருடங்களுக்குப்பின்பு அந்த முதலாம் உலக யுத்தத்தை நிறுத்தினார். அல்லேலூயா. எத்தனைப்பேர் விசுவாசிக்கிறோம்? யார் யுத்தத்தை நிறுத்தினது? வெளிப்படுத்தல் 7: 2ல் சொல்லப்பட்டிருக்கிற அந்த தூதன். அல்லேலூயா. யாருக்காவது சொல்லத் தெரியுமா? எந்த அரசாங்கத்துக்கும் சொல்லத் தெரியுமா? அமெரிக்கா நாட்டின் ஜனாதிபதி சொல்ல முடியுமா? யாராலும் சொல்லமுடியாது. அல்லேலூயா. அந்த தூதன் நிறுத்தினார். எந்த தூதன்? சகோ. பிரன்ஹாமுடன் பேசினாரே அதே தூதன் **(The same Angel who spoke to Bro. Branham stopped the War)**. அவர் பரிசுத்த ஆவியால் முத்திரைபோடுகிறவர். அவர் யார்? கர்த்தராகிய இயேசுகிறிஸ்து. அல்லேலூயா.

ஏன் ஆண்டவர் அதை நிறுத்தினார்? எனென்றால், சகோ. பிரன்ஹாம் ஒரு ஊழியத்தைச் செய்யவேண்டும். அல்லேலூயா. அதை நிறுத்தவில்லையென்றால் அந்த வேலையைச் செய்யமுடியாது. **(The Angel standing there and the winds were blowing on the earth)**. சமுத்திரத்தின்மேலும், பூமியின்மேலும் அந்த காற்று வீசுகிறது. யுத்தம் நடந்துகொண்டிருக்கிறது. அப்பொழுது தூதன் அங்கே சூரியன் உதிக்குந்திசையிலிருந்து இறங்கி வருகிறார். அவர் நேரத்தைப் பார்த்துக்கொண்டிருக்கிறார். சகோ. பிரன்ஹாம் அந்த மரத்தினடியில் வாளியை வைத்துக்கொண்டு எப்பொழுது நிற்பார் என்று பார்த்துக்கொண்டிருக்கிறார். அந்த குறிப்பிட்ட நபரை ஆண்டவர் பார்க்கிறார். அல்லேலூயா. உலகத்திலேயே அந்த ஒரு நபரிடம்தான் அவர்

பேசுகிறார். எத்தனையோ பெரிய பெரிய பிரசங்கியார்களெல்லாம் இருக்கிறார்கள். பில்லி கிரஹாம் **(Billy Graham)** இருக்கிறார். எத்தனையோபேர் இருக்கிறார்கள். அவர்களோடு பேசவில்லை. இந்த ஏழு வயது சிறுவன் அங்கே எப்பொழுது வருவார் என்று பார்த்திருந்து, அவரிடம் பேசுகிறார். ஆகையால், ஆண்டவர் ஒரு நேரத்தை வைத்திருக்கிறார். எந்த இடத்தில் பேசவேண்டும் என்று வைத்திருக்கிறார். நாம் எல்லாரும் இங்கே வந்து சாதாரணமாக உட்காரவில்லை. ஆண்டவர் முன்னாலேயே எல்லாவற்றையும் கண்டிருக்கிறார், அவர் முன்கூட்டியே தீர்மானித்திருக்கிறார் **(God foreordained it)**. அது இப்பொழுது நிறைவேறுகிறது. அல்லேலூயா.

“உனக்கு ஒரு ஊழியம் இருக்கிறது. ஜனங்கள் விசுவாசிக்கவேண்டும். அதனால் நான் யுத்தத்தை நிறுத்துகிறேன். உன்னுடைய ஊழியத்தினாலே ஒரு கூட்டமான ஜனங்கள் வருவார்கள். அதுவரைக்கும் உலகம் அழியாது”. அல்லேலூயா. வெளிப்படுத்தல் 7: 2ல் என்ன வாசிக்கிறோமென்றால், 1,44,000 பேர் முத்திரிக்கப்பட்டால்தான் உலகம் அழியும். அல்லது மூன்றாம் உலக யுத்தம் வராது.

இரண்டாம் உலக யுத்தம் **(II World War)** வரும்போது என்ன நடந்ததென்றால், எருசலேமை அவர்கள் கைப்பற்றினார்கள். இஸ்ரவேல் ஜனங்களுக்கு அந்தத் தேசம் கொடுக்கப்பட்டது. எசேக்கியல் 37ம் அதிகாரத்தில், உலர்ந்த எலும்புகள் அங்கே கிடக்கிறது. ஆவியானவர் எசேக்கியலை ஒரு பள்ளத்தாக்கிலே கொண்டுபோகிறார். உலர்ந்த எலும்புகள் நிறைய அங்கே குவியல் குவியலாக இருக்கிறது. மண்டையோடுகளும், காலெலும்புகளும், கையெலும்புகளும் மிகவும் காய்ந்துபோய் உலர்ந்துகிடக்கிறது. “இந்த எலும்புகள் உயிரடையுமா?” என்று கர்த்தர் கேட்கிறார். “ஆண்டவரே, அது உமக்குத்தான் தெரியும்” என்று சொல்லுகிறான். “நீ தீர்க்கதரிசனம் உரை” என்றார். அவன் தீர்க்கதரிசனம் உரைக்கும்போது, ஒரு இரைச்சல் உண்டாயிற்று. ஒவ்வொரு எலும்பும் தன்தன் எலும்போடே சேர்ந்துகொண்டது. அவைகள்மேல் நரம்புகளும் மாம்சமும் உண்டாயிற்று, மேற்புறமெங்கும் தோலினால் மூடப்பட்டது. அதன்பின்பு அவன் தீர்க்கதரிசனம் உரைக்கும்போது, ஜீவ ஆவி அவர்களுக்குள் பிரவேசிக்க, அவர்கள் உயிரடைந்து, காலூன்றி, மகா பெரிய சேனையாய் நின்றார்கள். அதைப்போலவே, சகோ. பிரன்ஹாம், மனுஷகுமாரனை

வெளிப்படுத்துகிறவராய் இருக்கிறார். தீர்க்கதரிசியாக இருக்கிறார். ஆண்டவர் தம்முடைய தீர்க்கதரிசியை மனுஷகுமாரன் என்று சொல்லுகிறார். இதோ, அவர் தீர்க்கதரிசனம் உரைக்கும்பொழுது, பல ஜாதி, ஜனங்களில் இருந்து ஒரு கூட்டமான மக்கள் இன்றைக்கு ஒரு சேனையாக வந்திருக்கிறார்கள். அல்லேலூயா. அது என்ன சேனை? ஒருவரும் எதிர்க்கக்கூடாத சேனை **(Invincible Army)**. எந்த ஸ்தாபனமும் **(denomination)** நம்மை மேற்கொள்ளமுடியாது. பிசாசு நம்மை மேற்கொள்ளமுடியாது. மரணமே நம்மை மேற்கொள்ளமுடியாது. அல்லேலூயா. எதிர்க்கக்கூடாத சேனை. தீர்க்கதரிசனம் உரைக்க உரைக்க அப்படி வந்திருக்கிறது. நீங்கள் ஏன் இவ்வளவுபேர் இங்கே உட்கார்ந்திருக்கிறீர்கள்? நான் அந்த வார்த்தையைத் தீர்க்கதரிசனமாய் இங்கே உரைக்கிறதால். அல்லேலூயா. எலும்புகள் அங்கேயிருந்தும் இங்கேயிருந்தும் வந்து ஒன்று சேர்கிறது. எல்லாம் ஒன்று சேர்ந்து ஒரு சேனையாய், ஒரு மணவாட்டியாய் **(Bride)** இருக்கும்பொழுது, ஒருவரும் அதை எதிர்க்கமுடியாது. அல்லேலூயா.

யூதர்கள் எல்லாரும் உலகமெங்கும் சிதறடிக்கப்பட்டார்கள். அவர்கள் தேசத்திற்கு திரும்பிவருவார்களா? எந்த விதமான வாய்ப்பும் இல்லை. எந்த நம்பிக்கையும் இல்லை. கி.பி 70ல் சிதறடிக்கப்பட்டவர்கள், கிட்டதட்ட 1900 வருடங்களுக்குப் பின்பு 1948ல் வந்து, ஆறு முனைகளைக் கொண்ட தாவீதின் நட்சத்திரம் **(Six pointed Star of David)** என்று கொடி அங்கே பறந்துக்கொண்டிருக்கிறது. அந்த உலர்ந்த எலும்புகள் உயிரடைந்தது. அல்லேலூயா. முதலாம் உலக யுத்தமும், இரண்டாம் உலக யுத்தமும் வரும்போது, அவர்கள் தங்கள் சொந்த தேசத்திற்குப் போகவேண்டும் என்று நினைத்தார்கள். அல்லேலூயா. எனென்றால், “அநியாயமாய் நாம் கொல்லப்படுகிறோம். நம்முடைய தேசத்திற்குப்போனால் நன்றாக இருக்குமே, நம்முடைய வீட்டிற்கு நாம் போகவேண்டும், அந்நிய தேசத்திலே இருக்கிறோமே” என்ற உணர்வு வந்து, அவர்களெல்லாரும் தங்கள் தேசத்திற்கு வந்தார்கள். ஆண்டவர் அவர்களை அங்கே கொண்டுவந்ததுதான் எக்காளப் பண்டிகை **(Feast of Trumpet)**. அல்லேலூயா.

1,44,000 பேர் முத்திரிக்கப்படவேண்டும் **(1,44,000 are to be sealed)**. முத்திரைப்போட்டுத் தீருமளவும் காற்று வீசாதபடி பிடித்திருக்கவேண்டும். அர்மெகெதோன் **(Armageddon)** யுத்தம்தான் மூன்றாம் உலக யுத்தம் **(III**

**World War)**. “அப்பொழுது எபிரெயு பாஷையிலே அர்மகெதோன் என்னப்பட்ட இடத்திலே அவர்களைக் கூட்டிச் சேர்த்தான்” என்று வெளிப்படுத்தல் 16: 16ல் வாசிக்கிறோம். அது அணு ஆயுத யுத்தம் **(Nuclear War)**. உலகமே அழிந்துபோகும். ஆனால், 1,44,000 பேர் முத்திரிக்கப்படாமல் மூன்றாம் உலக யுத்தம் வராது. அவர்கள் முத்திரிக்கப்படும்போது, நாம் இங்கே இருக்கமாட்டோம். நாம் மேலே சென்றிருப்போம். அல்லேலூயா. ஐந்தாம் முத்திரைக்கும் ஆறாம் முத்திரைக்கும் மத்தியிலே எடுத்துக்கொள்ளப்படுதல் இருக்கிறது. ஐந்தாம் எக்காளத்துக்கும் ஆறாம் எக்காளத்துக்கும் மத்தியிலே எடுத்துக்கொள்ளப்படுதல் இருக்கிறது. அல்லேலூயா. ஆஸ்நாத் அரண்மனைக்குள் போய்விட்டாள். ரூத் போவாசுடன் ஐக்கியப்பட்டுவிட்டாள். அல்லேலூயா. அதன்பின்புதான், நகோமி காட்சியிலே வரப்போகிறாள். எடுத்துக்கொள்ளப்படுதலுக்குப் பின்பு அவர்கள் முத்திரிக்கப்படுவார்கள் **(They will be sealed after the Rapture)**. அவர்களுடைய தொகை இலட்சத்து நாற்பத்து நாலாயிரம்பேர் என்று சொல்லப்பட்டிருக்கிறது. தானியேலுடைய எழுபதாவது வாரத்தின் கடைசி பகுதியிலே அவர்கள் முத்திரிக்கப்படுவார்கள் **(They will be sealed in the last half of the Seventieth Week of Daniel)**. ஆமென். அவர்களுடைய நெற்றியிலே அந்த முத்திரைபோடவேண்டும். அதுதான் பாவநிவிர்த்தி பண்டிகை **(Feast of Atonement)**.

ஐந்தாம் எக்காளமும், ஆறாம் எக்காளமும், ஏழாம் எக்காளமும் எதைக்குறிக்கிறது? “பின்பு, ஒரு தூதன் வானத்தின் மத்தியிலே பறந்துவரக்கண்டேன்: அவன் மகா சத்தமிட்டு: இனி எக்காளம் ஊதப்போகிற மற்ற மூன்று தூதருடைய எக்காளசத்தங்களினால் பூமியில் குடியிருக்கிறவர்களுக்கு ஐயோ, ஐயோ, ஐயோ, (ஆபத்துவரும்) என்று சொல்லக்கேட்டேன்” என்று வெளிப்படுத்தல் 8: 13ல் வாசிக்கிறோம். ஐயோ, ஐயோ, ஐயோ, **(Three Woes)** ஆபத்துவரும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. யாருக்கு? பூமியில் குடியிருக்கிறவர்களுக்கு. முதல் நான்கு எக்காளங்களில் இயற்கையின் பாதிப்புகளைப் **(Natural disturbances)** பார்க்கிறோம். பூமி மாசுபட்டுப்போகிறது. சுற்றுச் சூழல் மாசுபட்டுப்போகிறது. இப்பொழுது மனுஷனுக்குப் பாதிப்பு. அதுதான் ஐந்தாம் எக்காளத்தைக் **(Fifth Trumpet)** குறித்து வெளிப்படுத்தல் 9: 1 – 12 வசனங்களில் எழுதியிருக்கிறது. அது முதலாம் உலக யுத்தம் **(I World War)**. ஆறாம் எக்காளத்தைக் **(Sixth Trumpet)** குறித்து வெளிப்படுத்தல் 9: 13 – 21 வசனங்களில் எழுதியிருக்கிறது. அது இரண்டாம் உலக யுத்தம் **(II**

**World War)**. வெளிப்படுத்தல் 16: 16ல் அர்மெகெதோன் யுத்தத்தைக் குறித்து எழுதியிருக்கிறது. அது மூன்றாம் உலக யுத்தம் **(III World War)**. அது ஏழாவது கோபகலசமாக **(Seventh Vial)** இருக்கிறது. இப்படி, எக்காளங்களாகவும், முத்திரைகளாகவும், கோபகலசங்களாகவும் ஆண்டவர் எழுதிவைத்திருக்கிறார். உங்களுக்கு அதின்மேல் நாட்டம் இருந்தால் உங்களுக்கு குழப்பமில்லாமல் புரியும். அதற்கு நீங்கள் திருவசனத்திலே, தேவனுடைய வார்த்தையிலே கொஞ்சம் பிரயாசப்படவேண்டும்.

ஐந்தாம் முத்திரைக்கும், ஆறாம் முத்திரைக்கும் இடையில் என்ன நடக்கிறதென்று எழுதவில்லை. ஐந்தாம் முத்திரையானது எக்காளப் பண்டிகையாக இருக்கிறது. தங்களுடைய சொந்த தேசத்தில் கூடியிருக்கிறார்கள். ஆறாம் முத்திரையானது பாவநிவிர்த்தி பண்டிகையாக இருக்கிறது. அது ஆறாம் எக்காளமாகவும் இருக்கிறது. அதற்கு மத்தியில் என்ன நடக்கிறதென்று புறஜாதிகளைக் குறித்து ஒன்றும் எழுதப்படவில்லை. இன்றைக்கு நாம் அதற்கு மத்தியில் இருக்கிறோம். அதற்கு மத்தியில் என்ன நடக்கிறது? எடுத்துக்கொள்ளப்படுதல் நடக்கிறது. அல்லேலூயா. பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தைப் பெறவேண்டிய நேரம். ஆமென்.

இவ்விதமாக அந்த முத்திரைகள் அங்கே எழுதப்பட்டிருக்கிறது. நம்முடைய வாழ்க்கை இப்பொழுது வார்த்தையோடு பொருந்தவேண்டிய நேரம். இப்பொழுது நீங்கள் எங்கே இருக்கிறீர்கள்? ஐந்தாம் முத்திரைக்கும், ஆறாம் முத்திரைக்கும் மத்தியில் இருக்கிறோம். ஐந்தாம் எக்காளத்துக்கும் ஆறாம் எக்காளத்துக்கும் மத்தியில் இருக்கிறோம். ஐந்தாம் எக்காளம் எது, ஆறாம் எக்காளம் எது, என்று உங்களுக்குத் தெரியவேண்டும். நான் கர்த்தருடைய கிருபையினால், வெளிப்படுத்தின விசேஷத்தை மனப்பாடம் பண்ணிவைத்திருக்கிறேன். அல்லது இந்தச் செய்தியைப் புரிந்துகொள்ள முடியாது. நம்முடைய வாழ்க்கையானது கர்த்தருடைய வார்த்தையோடு இணைந்திருக்க வேண்டும் **(We see our life matching the Word allotted for the day we are living in)**. இந்த நேரத்திற்குரிய செய்திக்கு, இந்த நேரத்திற்குரிய வாக்குத்தத்தத்திற்கு, நம்முடைய வாழ்க்கை பரிபூரணமாகப் பொருந்தவேண்டும் **(You are the perfect matching piece to the Promise of God)**. அப்பொழுதுதான் நாம் எடுத்துக்கொள்ளப்படுதலில் பங்குபெறமுடியும். எழுதப்பட்ட வார்த்தைக்கு நாமே வியாக்கியானமாக இருக்கவேண்டும் **(The interpretation of the Written Word is laying in the**

**Bible)**. அந்த வேதவாக்கியம் நம்முடைய வாழ்க்கையில் நிறைவேற வேண்டும். அல்லேலூயா. நாம் புத்தியுள்ள கன்னிகைகளா? புத்தியில்லாத கன்னிகைகளா? நாம் புத்தியுள்ள கன்னிகைகள் என்பதை நம்முடைய வாழ்க்கை நிருபிக்கவேண்டும். அப்படி இருந்தால் நீங்கள் தேவனுடைய வார்த்தையின் வியாக்கியானமாக இருக்கிறீர்கள் **(You are the interpretation of God's Word)**. அல்லேலூயா.

மத்தேயு 24ம் அதிகாரத்தில், இயேசுகிறிஸ்து ஏழு முத்திரைகளையும் **(Seven Seals)**, ஏழு எக்காளங்களையும் **(Seven Trumpets)** பேசுகிறார். அது எழுத்துவடிவமாக **(Written Form)** இருக்கிறது. வெளிப்படுத்தலில், அது அடையாளச் சின்னங்களாக **(Symbol Form)** இருக்கிறது. இன்றைக்கு அது உண்மையாக **(reality)** நிறைவேறுகிறது.

**மத்தேயு 24: 4, 5**

4. இயேசு அவர்களுக்குப் பிரதியுத்தரமாக: ஒருவனும் உங்களை வஞ்சியாதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள்;

5. ஏனெனில், அநேகர் வந்து, என் நாமத்தைத் தரித்துக்கொண்டு: நானே கிறிஸ்து என்று சொல்லி, அநேகரை வஞ்சிப்பார்கள்.

“நானே கிறிஸ்து என்று சொல்லி, அநேகரை வஞ்சிப்பார்கள்” என்று சொல்லுகிறார். இதுதான் முதலாம் முத்திரை.

**வெளிப்படுத்தல் 6: 1, 2**

1. ஆட்டுக்குட்டியானவர் முத்திரைகளில் ஒன்றை உடைக்கக்கண்டேன். அப்பொழுது நான்கு ஜீவன்களில் ஒன்று என்னை நோக்கி: நீ வந்து பார் என்று இடிமுழக்கம்போன்ற சத்தமாய்ச் சொல்லக்கேட்டேன்.

2. நான் பார்த்தபோது, இதோ, ஒரு வெள்ளைக்குதிரையைக் கண்டேன்; அதின்மேல் ஏறியிருந்தவன் வில்லைப் பிடித்திருந்தான்; அவனுக்கு ஒரு கிரீடங் கொடுக்கப்பட்டது; அவன் ஜெயிக்கிறவனாகவும் ஜெயிப்பவனாகவும் புறப்பட்டான்.

அந்திக்கிறிஸ்து வெள்ளைக்குதிரையில் போய், தன்னை ஒரு நல்லவனாகக் காண்பித்து அநேகரை வஞ்சிப்பான். அதன்பின்பு என்ன வாசிக்கிறோம்?

**மத்தேயு 24: 6**

6. யுத்தங்களையும் யுத்தங்களின் செய்திகளையும் கேள்விப்படுவீர்கள்; கலங்காதபடி எச்சரிக்கையாயிருங்கள்; இவைகளெல்லாம் சம்பவிக்கவேண்டியதே; ஆனாலும், முடிவு உடனே வராது.

"யுத்தங்களையும் யுத்தங்களின் செய்தியையும் கேள்விப்படுவீர்கள்" என்று சொல்லுகிறார். அது இரண்டாம் முத்திரை.

**வெளிப்படுத்தல் 6: 3, 4**

3. அவர் இரண்டாம் முத்திரையை உடைத்தபோது, இரண்டாம் ஜீவனானது: நீ வந்துபார் என்று சொல்லக்கேட்டேன்.

4. அப்பொழுது சிவப்பான வேறொரு குதிரை புறப்பட்டது; அதின்மேல் ஏறியிருந்தவனுக்கு, பூமியிலுள்ளவர்கள் ஒருவரையொருவர் கொலைசெய்யத்தக்கதாகச் சமாதானத்தைப் பூமியிலிருந்தெடுத்துப் போடும்படியான அதிகாரம் கொடுக்கப்பட்டது; ஒரு பெரிய பட்டயமும் அவனுக்குக் கொடுக்கப்பட்டது.

அநேகர் கொல்லப்படுகிறார்கள். சாத்தான், பூமியிலிருந்து சமாதானத்தை எடுத்துப்போடுகிறான். இவைகளெல்லாம் வேதனைகளுக்கு ஆரம்பம் என்று சொல்லப்பட்டிருக்கிறது. இரண்டாம் முத்திரையைக் குறித்து இயேசுகிறிஸ்து சொல்லுகிறார்.

**மத்தேயு 24: 7**

7. ஜனத்துக்கு விரோதமாய் ஜனமும், ராஜ்யத்துக்கு விரோதமாய் ராஜ்யமும் எழும்பும்; பஞ்சங்களும், கொள்ளைநோய்களும், பூமியதிர்ச்சிகளும் பல இடங்களில் உண்டாகும்.

பஞ்சங்கள் ஏற்படும் என்று சொல்லியிருக்கிறது. அது மூன்றாம் முத்திரை.

**வெளிப்படுத்தல் 6: 5, 6**

5. அவர் மூன்றாம் முத்திரையை உடைத்தபோது, மூன்றாம் ஜீவனானது: நீ வந்துபார் என்று சொல்லக்கேட்டேன். நான் பார்த்தபோது, இதோ, ஒரு கறுப்புக்குதிரையைக் கண்டேன்; அதின்மேல் ஏறியிருந்தவன் ஒரு தராசைத் தன் கையிலே பிடித்திருந்தான்.

6. அப்பொழுது, ஒரு பணத்துக்கு ஒருபடி கோதுமையென்றும், ஒரு பணத்துக்கு மூன்றுபடி வாற்கோதுமையென்றும், எண்ணெயையும் திராட்சரசத்தையும் சேதப்படுத்தாதே என்றும், நான்கு ஜீவன்களின் மத்தியிலிருந்து உண்டான சத்தத்தைக் கேட்டேன்.

அவன் தராசைத் தன் கையில் பிடித்திருந்தான். அது பஞ்சத்தைக் குறிக்கிறது. கொள்ளைநோய்கள், மரணம், அதெல்லாம் நான்காம் முத்திரையைக் குறிகிறது.

## வெளிப்படுத்தல் 6: 7, 8

7. அவர் நாலாம் முத்திரையை உடைத்தபோது, நாலாம் ஜீவனானது: நீ வந்துபார் என்று சொல்லுஞ் சத்தத்தைக் கேட்டேன்.

8. நான் பார்த்தபோது, இதோ, மங்கின நிறமுள்ள ஒரு குதிரையைக் கண்டேன்; அதின்மேல் ஏறியிருந்தவனுக்கு மரணம் என்று பெயர்; பாதாளம் அவன்பின் சென்றது. பட்டயத்தினாலும், பஞ்சத்தினாலும், சாவினாலும், பூமியின் துஷ்ட மிருகங்களினாலும், பூமியின் காற்பங்கிலுள்ளவர்களைக் கொலைசெய்யும்படியான அதிகாரம் அவைகளுக்குக் கொடுக்கப்பட்டது.

அதுதான் நான்காம் முத்திரை. இயேசுகிறிஸ்து முத்திரைகளைக் குறித்து பேசுகிறார். அதன்பின்பு, மத்தேயு 24: 9 – 13 வரை ஐந்தாம் முத்திரையைக் குறித்து இயேசுகிறிஸ்து பேசுகிறார்.

## மத்தேயு 24: 9 - 13

9. அப்பொழுது, உங்களை உபத்திரவங்களுக்கு ஒப்புக்கொடுத்து, உங்களைக் கொலைசெய்வார்கள்; என் நாமத்தினிமித்தம் நீங்கள் சகல ஜனங்களாலும் பகைக்கப்படுவீர்கள்.

10. அப்பொழுது, அநேகர் இடறலடைந்து, ஒருவரையொருவர் காட்டிக் கொடுத்து, ஒருவரையொருவர் பகைப்பார்கள்.

11. அநேகங் கள்ளத்தீர்க்கதரிசிகளும் எழும்பி, அநேகரை வஞ்சிப்பார்கள்.

12. அக்கிரமம் மிகுதியாவதினால் அநேகருடைய அன்பு தணிந்துபோம்.

13. முடிவுபரியந்தம் நிலைநிற்பவனே இரட்சிக்கப்படுவான்.

கொலைசெய்யப்பட்ட ஆத்துமாக்கள் பலிபீடத்தின்கீழ் இருக்கிறார்கள். இயேசுகிறிஸ்து ஐந்தாம் முத்திரையைப்பற்றிப் (வெளிப்படுத்தல் 6: 9 – 11) பேசுகிறார். யூதர்கள் என்ற காரணத்தினாலே, ஹிட்லர் அவர்களைப் பகைத்தான். அவர்களைக் கொலை செய்தான். 13ம் வசனம் வரைக்கும் ஐந்தாம் முத்திரையை நாம் பார்க்கிறோம். ஐந்தாம் முத்திரையானது ஐந்தாம் எக்காளமாக இருக்கிறது.

அதன்பின்பு நாம் பார்க்கும்போது, ஐந்தாம் முத்திரைக்கும் ஆறாம் முத்திரைக்கும் மத்தியிலே இடைவெளி இருக்கிறது. அங்கேதான்

எடுத்துக்கொள்ளப்படுதல் நடக்கிறது. இன்றைக்கு நாம் அங்கே இருக்கிறோம். ஐந்தாம் எக்காளத்துக்கும் ஆறாம் எக்காளத்துக்கும் மத்தியிலே நாம் இருக்கிறோம். ஆறாம் முத்திரையைக் குறித்து இயேசுகிறிஸ்து என்ன சொல்லுகிறார்? 29ம் வசனத்தை வாசிக்கலாம்.

**மத்தேயு 24: 29**

29. அந்நாட்களின் உபத்திரவம் முடிந்தவுடனே, சூரியன் அந்தகாரப்படும், சந்திரன் ஒளியைக் கொடாதிருக்கும், நட்சத்திரங்கள் வானத்திலிருந்து விழும், வானத்தின் சத்துவங்கள் அசைக்கப்படும்.

இதோ, உபத்திரவம் முடிந்தவுடனே என்றால், உபத்திரவகாலத்தை நினைக்கக்கூடாது. அது குறைவான உபத்திரவத்தைக் **(Amateur Tribulation)** குறிக்கிறது. வேதத்தைச் சரியாகப் புரிந்துகொள்ளவில்லையென்றால் குழப்பம் வரும். ஹிட்லர், முசோலினி, ஸ்டாலின் என்பவர்கள் யூதர்களைக் கொலைசெய்தார்கள். அந்த உபத்திரவத்தை அது குறிக்கிறது. மகா உபத்திரவகாலம் அல்ல. அந்த உபத்திரவம் முடிந்தவுடனே, சூரியன் அந்தகாரப்படும், சந்திரன் ஒளியைக் கொடாதிருக்கும், நட்சத்திரங்கள் வானத்திலிருந்து விழும், வானத்தின் சத்துவங்கள் அசைக்கப்படும் என்று சொல்லியிருக்கிறது. இது எதைக் குறிக்கிறது? மகா உபத்திரவகாலத்தைக் **(Great Tribulation)** குறிக்கிறது. ஆறாம் முத்திரையைக் குறிக்கிறது.

இந்த உபத்திரவகாலத்தில்தான் 1,44,000 பேர் முத்திரிக்கப்படுகிறார்கள். மத்தேயு 24: 9 – 13 வரை குறைவான உபத்திரவத்தைக் குறித்து எழுதியிருக்கிறது. அது ஐந்தாம் முத்திரை. மத்தேயு 24: 29 - 31 வரை மகா உபத்திரவத்தைக் குறித்து எழுதியிருக்கிறது. இது ஆறாம் முத்திரை. அது ஐந்தாம் எக்காளம். இது ஆறாம் எக்காளம். இரண்டுக்கும் மத்தியில்தான் எடுத்துக்கொள்ளப்படுதல் நடக்கிறது. ஆண்டவர் புறஜாதி மணவாட்டியைத் தெரிந்துகொள்ளுகிறார். ஆமென். வெளிப்படுத்தல் 6: 12 – 17 வரை ஆறாம் முத்திரையப்பற்றி எழுதியிருக்கிறது. மத்தேயு 24ம் அதிகாரத்தில் என்ன வாசிக்கிறோம்?

**மத்தேயு 24: 30, 31**

30. அப்பொழுது, மனுஷகுமாரனுடைய அடையாளம் வானத்தில் காணப்படும். அப்பொழுது, மனுஷகுமாரன் வல்லமையோடும் மிகுந்த மகிமையோடும் வானத்தின் மேகங்கள்மேல் வருகிறதைப் பூமியிலுள்ள சகல கோத்திரத்தாரும் கண்டு புலம்புவார்கள்.

31. வலுவாய்த் தொனிக்கும் எக்காள சத்தத்தோடே அவர் தமது தூதர்களை அனுப்புவார்; அவர்கள் அவரால் தெரிந்து கொள்ளப்பட்டவர்களை வானத்தின் ஒரு முனை முதற்கொண்டு மறுமுனைமட்டும் நாலு திசைகளிலுமிருந்து கூட்டிச் சேர்ப்பார்கள்.

வலுவாய்த் தொனிக்கும் எக்காள சத்தத்தோடே அவர் தமது தூதர்களை அனுப்புவார். ஒரு எக்காளம்தான், ஆனால், தூதர்கள் இரண்டுபேர். மோசேயும், எலியாவும் வந்து 1,44,000 பேரைக் கூட்டிச்சேர்ப்பார்கள். அவ்விதமாக அங்கே எழுதப்பட்டிருக்கிறது.

கர்த்தராகிய இயேசுகிறிஸ்து, ஒலிவ மலையிலே, சாயங்கால நேரத்திலே **(Evening Time)**, தம்முடைய சீஷர்களுக்கு அந்த முத்திரைகளைத் திறக்கிறார். இன்றைக்கு நமக்கும் கர்த்தராகிய இயேசுகிறிஸ்து, சாயங்கால நேரத்திலே முத்திரைகளைத் திறந்திருக்கிறார். அல்லேலூயா. காலையிலே தேவாலயத்தைப் பார்த்துவிட்டு வந்திருக்கிறார்கள். மாலையிலே, ஒலிவ மலையின் உச்சியில் இருக்கிறார்கள். சகோ. பிரன்ஹாம், அது கி.பி 30 **(30 A. D)** என்று சொல்லுகிறார். அப்பொழுது இயேசுகிறிஸ்து அவர்களுக்கு முத்திரைகளை விளக்கிக் காண்பிக்கிறார். இன்றைக்கு, 1963ம் வருடம் **(1963 A. D)** முத்திரைகள் திறக்கப்பட்டிருக்கிறது. அல்லேலூயா. அன்றைக்கு, அது எழுத்துவடிவமாக இருந்தது. பின்பு, அடையாளச் சின்னங்களாக எழுதப்பட்டது. இன்றைக்கு அது திறக்கப்பட்டிருக்கிறது. ஆமென்.

மத்தேயு 24ம் அதிகாரம், 1 – 8 வரை வாசிக்கும்பொழுது, அங்கே முதல் நான்கு முத்திரைகளைப் பார்க்கிறோம். 9 – 13 வரை வாசிக்கும்போது, அது ஐந்தாம் முத்திரை. 29 – 31 வரை வாசிக்கும்போது, அது ஆறாம் முத்திரை. ஆனால், கர்த்தருடைய வருகை **(Coming of the Lord)** எப்படி இருக்கிறது? கர்த்தருடைய வருகை ஏழாம் முத்திரையாக **(Seventh Seal)** இருக்கிறது. ஏழாம் முத்திரை, ஆயிர வருட ஆட்சியைக் குறிக்கிறது. அது கூடாரப்பண்டிகையாக, ஏழாவது எக்காளமாக இருக்கிறது. மத்தேயு 24ம் அதிகாரம், வெளிப்படுத்தல் 6, 7ம் அதிகாரங்கள், லேவியராகமம் 23ம் அதிகாரம், எல்லாமே ஒன்றோடு ஒன்று இணைகிறது.

இப்பொழுது, அத்திமரமானது துளிர்விடுகிறது. **மத்தேயு 24: 32**

32. அத்திமரத்தினால் ஒரு உவமையைக் கற்றுக்கொள்ளுங்கள்; அதிலே இளங்கிளை தோன்றி, துளிர்விடும்போது, வசந்தகாலம் சமீபமாயிற்று என்று அறிவீர்கள்.

வசந்தகாலம் என்றால் என்ன? அது கர்த்தருடைய வருகையாக இருக்கிறது. அங்கே ஏழாம் முத்திரை சொல்லப்பட்டிருக்கிறது. ஏழாம் முத்திரை என்னது? அது கர்த்தருடைய வருகை. ஆண்டவர் ஏழாம் முத்திரையை மறைமுகமாகச் சொல்லுகிறார். இப்பொழுது அத்திமரமானது **(Fig tree)** துளிர்விட்டிருக்கிறது. அத்திமரம் இஸ்ரவேலைக் குறிக்கிறது. துளிர்விடுவது எழுப்புதலைக் **(Revival)** குறிக்கிறது. இன்றைக்கு நாம் துளிர்விடவேண்டும். செத்த மரத்தைப்போல இருக்கக்கூடாது. அல்லேலூயா. இஸ்ரவேல் துளிர்விட்டிருக்கிறது. கர்த்தருடைய வருகை சமீபமாக இருக்கிறது. அவர் வாசலருகே நிற்கிறார். அதன்பின்பு, 33ம் வசனத்தில் என்ன வாசிக்கிறோம்?

**மத்தேயு 24: 33**

33. அப்படியே இவைகளையெல்லாம் நீங்கள் காணும்போது, அவர் சமீபமாய் வாசலருகே வந்திருக்கிறார் என்று அறியுங்கள்.

கர்த்தருடைய வருகை சமீபமாக இருக்கிறது. அதன்பின்பு 34ம் வசனம்.

**மத்தேயு 24: 34**

34. இவைகளெல்லாம் சம்பவிக்கு முன்னே இந்தச் சந்ததி ஒழிந்துபோகாதென்று, மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்.

அந்தச் சந்ததி யார்? நீங்களும் நானும். அல்லேலூயா. இஸ்ரவேல் ஜனங்கள் தங்கள் சொந்த தேசத்தில் வந்திருக்கிறார்கள். உலர்ந்த எலும்புகள் உயிரடைந்திருக்கிறது. பட்டுப்போன அத்திமரம் துளிர்த்திருக்கிறது. 1900 வருஷமாக பட்டுப்போயிருந்தது. இப்பொழுது துளிர்த்திருக்கிறது. கர்த்தருடைய வருகை சமீபமாய் இருக்கிறது. முதலாம் உலக யுத்தமும், இரண்டாம் உலக யுத்தமும் அவர்களைத் தங்கள் சொந்த தேசத்தில் கொண்டுவந்திருக்கிறது. அவர்கள் தங்கள் சொந்த தேசத்தில் இருக்கிறதைக் காண்கிற சந்ததி நாம்தான். நூறு வருடங்களுக்குமுன் இருந்தவர்கள் அதைப் பார்க்கவில்லை. இந்தக் கடைசி நேரத்திலே வாழுகிற நாம் அதைப் பார்க்கிறோம். இந்தச் சந்ததி ஒழிந்துபோகாது என்றால், இந்தச் சந்ததி எடுத்துகொள்ளப்படுதலில் **(Rapture)** பங்குபெறும் என்று அர்த்தம். எத்தனைப் பேர் விசுவாசிக்கிறோம்?

1916ம் வருஷத்தில், கர்த்தருடைய தூதனானவர் புயல் காற்றிலிருந்து தீர்க்கதரிசியிடம் பேசும்போது, “உனக்கு ஒரு ஊழியம் இருக்கிறது” என்று சொன்னார். அப்பொழுது அவருக்கு ஏழு வயது. 1939 – 1945 வரைக்கும் இரண்டாம் உலக யுத்தம் நடந்தது. சகோ. பிரன்ஹாம் அப்பொழுது ஊழியம் செய்துகொண்டுதான் இருக்கிறார். இந்த இரண்டு யுத்தங்களும், தங்களுடைய சொந்த தேசத்திற்குப் போகவேண்டும் என்ற விருப்பத்தை அவர்களுக்கு ஏற்படுத்தின. 1946ம் வருடம் மே மாதம் 7ம் தேதியிலே, இஸ்ரவேல் நாடு அவர்களுக்குக் கொடுக்கப்பட்டது. 1948ம் வருடம், அது தேசமாக மாறினது. எப்பொழுது அந்த தேசம் அவர்களுக்குக் கொடுக்கப்பட்டதோ, அதே தேதியிலே கர்த்தருடைய தூதனானவர் சகோ. பிரன்ஹாமைச் சந்திக்கிறார். அல்லேலூயா. என்ன ஊழியம் இருக்கிறதென்பதைச் சொல்லிவிட்டார். அல்லேலூயா.

1933ல் அவர் ஞானஸ்நானம் கொடுக்கும்போது, “யோவான் ஸ்நானன் என்னுடைய முதலாம் வருகைக்கு முன்னோடியாக அனுப்பப்பட்டதுபோல, நீ என்னுடைய இரண்டாம் வருகைக்கு முன்னோடியாக அனுப்பப்படுகிறாய். உன செய்தி உலகமெங்கும் போகும்” என்று கர்த்தர் சொன்னார். முதலில், ஏழு வயதாய் இருக்கும்போது, உனக்கு ஒரு ஊழியம் இருக்கிறதென்று சொல்லுகிறார். அதன்பின்பு, 1933ம் வருடம், சகோ. பிரன்ஹாமுக்கு 24 வயது, அப்பொழுது இன்னும் கொஞ்சம் வெளிப்படையாக ஆண்டவர் சொல்லுகிறார். “உனக்கு ஒரு செய்தி **(Message)** இருக்கும். அந்த செய்தி உலகமெங்கும் போகும்”. அதன்பின்பு, 1946ம் வருடம், மே மாதம் 7ம் தேதி, குகையிலே, சகோ. பிரன்ஹாம் உபவாசித்து ஜெபிக்கும்போது, அதிகாலை மூன்று மணிக்கு, கர்த்தருடைய தூதனானவர் என்ன சொல்லுகிறார் என்றால், “நீ சுகமாக்கும் எழுப்புதலை **(Healing Revival)** உலகத்துக்குக் கொண்டுசெல்வாய். நீ உத்தமமாக இருந்தால் ஜனங்களுடைய இருதயத்தின் இரகசியத்தை அறியமுடியும். உன்னுடைய ஜெபத்திற்கு முன்பாக கேன்சர் **(cancer)** வியாதிகூட நிற்கமுடியாது” என்ற ஊழியத்தைக் **(Commission)** கொடுக்கிறார். அதன்பின்பு, 1963ம் வருடம், அதே தூதனானவர் வந்து வெளிப்படுத்தி விட்டார். அல்லேலூயா.

அந்தச் செய்தி **(Message)** என்னவென்று சகோ. பிரன்ஹாமுக்குத் தெரியாது. அந்தச் செய்திக்காக அவர் காத்திருக்கிறார். வியாதி சுகமாகிறது. இருதயத்தின் இரகசியத்தை வெளிப்படுத்துகிறார். ஆனாலும் சகோ.

பிரன்ஹாமுக்குத் திருப்தியில்லை. “ஒரு செய்தி வரும் என்று சொன்னாரே! உன் செய்தி இரண்டாம் வருகைக்கு முன்னோடியாக இருக்கும், அது ஒரு கூட்டமான ஜனங்களை ஆயத்தப்படுத்தும் என்று சொன்னாரே!” என்று அந்தச் செய்திக்காகக் காத்திருக்கும்போது, ஏழு தூதர்கள் நித்தியத்தில் இருந்துவந்து அந்த ஊழியத்தைக் கொடுத்தார்கள். ஏழு முத்திரைகளும் திறக்கப்பட்டது. அல்லேலூயா.

தேசிய வல்லமை **(National Force)**, யூதர்களைத் தங்கள் சொந்த தேசத்தில் கொண்டுவந்திருக்கும்போது, தேவனுடைய வல்லமை **(Power of God)**, நம்மை வாக்குத்தத்தம்பண்ணப்பட்ட வார்த்தையில் கொண்டுவந்திருக்கிறது. அந்தச் செய்தியில் **(Message)** நம்மைக் கொண்டுவந்திருக்கிறது. அல்லேலூயா. ஏழு வயதிலிருந்து 1963 வரை கர்த்தர் அவருடன் ஈடுபட்டு, கொஞ்சம் கொஞ்சமாக வெளிப்படுத்தி, பின்பு முழுவதுமாக வெளிப்படுத்திவிட்டார். கர்த்தர் அவரை எடுத்துக்கொண்டபின்பு, இன்றைக்கு நாம் ஆராய்ந்து பார்த்து, ஆராய்ந்து பார்த்து, மிக ஆழமாக வந்திருக்கிறோம். இதுதான் மணவாட்டி ஊழியம் **(Bride Ministry)**. ஐந்துவிதமான ஊழியம் **(Fivefold Ministry)**.

இன்னும் அவர்களுக்கு ஆறாவது முத்திரை திறக்கப்படவில்லை. அவர்களுக்கு, ஆறாவது எக்காளம் இன்னும் வரவில்லை. நாம் அதற்கு மத்தியில் இருக்கிறோம். ஆண்டவர் ஒரு மணவாட்டியைத் தெரிந்துகொண்டிருக்கிறார். இந்தச் செய்தி ஒரு ஜனத்தை ஆயத்தப்படுத்துகிறது. அல்லேலூயா. கர்த்தர் தீர்க்கதரிசிக்கு, கொஞ்சம் கொஞ்சமாகத் தெளிவாக்கி, பின்பு முழுவதையும் தெளிவாக்கிவிட்டார். அதைப்போல, ஒரு போதகர் தேவனால் தெரிந்துகொள்ளப்படுவார் என்றால், அவருக்கு ஆண்டவர் கொஞ்சம் கொஞ்சமாக வெளிப்படுத்தி, கடைசியில் எல்லாவற்றையும் வெளிப்படுத்திவிடுவார். வேதாகமம் நமக்கு இப்பொழுது தெளிவாக **(plain)** இருக்கிறது. அப்படியென்றால், நாம் எடுத்துக்கொள்ளப்படுதலில் பங்குபெறலாம். பரிபூரண அறிவுதான் **(Perfect Knowledge)** பரிபூரண விசுவாசத்தைக் **(Perfect Faith)** கொண்டுவருகிறது. பரிபூரண விசுவாசம் நம்மை மேலே கொண்டுசெல்லும். நாம் இப்பொழுது 2016ல் இருக்கிறோம். கர்த்தர் நமக்கு எல்லாவற்றையும் வெளிப்படுத்திவிட்டார். அல்லேலூயா.

சகோ. பிரன்ஹாமுக்கு 1933ம் வருடம் ஏழு தரிசனங்கள் **(7 Visions)** கொடுக்கப்பட்டது. அந்த ஏழு தரிசனங்களில் ஏழு எக்காளங்கள் இருக்கிறது. முதல் மூன்று தரிசனங்கள் என்ன? எல்லாருக்குமே நன்றாகத் தெரியவேண்டும். படித்த பிள்ளைகள் எல்லாருமே அதில் உங்கள் மனதைக் கொஞ்சம் செலுத்துங்கள். படிப்பு உலகத்தோடு முடிந்துபோகும்.

**முதல் தரிசனம்:** "முசோலினி **(Mussolini)** எத்தியோப்பியா **(Ethiopia)** மீது படைஎடுத்துப்போவான். எத்தியோப்பியா அவனுக்குச் சரணடையும். ஆனாலும் அவனுடைய முடிவு மர்மமாக இருக்கும்". ஜனங்கள் அவனைப் பகைத்தார்கள். அவனுடைய முடிவு மிகவும் மோசமாக இருந்தது.

**இரண்டாம் தரிசனம்:** "ஹிட்லர் **(Hitler)** என்பவன் இரண்டாம் உலக யுத்தத்திற்குக் காரணமாக இருப்பான். அமெரிக்க ஜனாதிபதி ரூசவெல்டும் **(Roosevelt)** அதற்குக் காரணமாக இருப்பார். சீக்பிரீட் எல்லை **(Siegfried Line)** அருகில் அமெரிக்கர்கள் அதிக அளவில் கொல்லப்படுவார்கள். ஹிட்லர் தோல்வி அடைவான். அவன் முடிவு மர்மமாக இருக்கும்". சகோ. பிரன்ஹாம், இந்தத் தரிசனத்தைக் காணும்போது, இன்னும் இரண்டாம் உலக யுத்தம் ஆரம்பமாகவேயில்லை. அவர் தரிசனத்தில் கண்டவிதமாகவே நடந்தது. ஹிட்லரின் முடிவு பயங்கரமாகவும், மர்மமாகவும் இருந்தது.

**மூன்றாம் தரிசனம்:** பாஸீஸம் **(Fascism)**, நாஸீஸம் **(Nazism)**, கம்யூனிஸம் **(Communism)** என்னும் மூன்று பெரிய இயக்கங்கள் இவ்வுலகத்தில் தோன்றும் என்றும், முடிவில் பாஸீஸமும் நாஸீஸமும் கம்யூனிஸத்தோடு இணைந்துவிடும். அப்பொழுது "ரஷ்யாவை ஜாக்கிரதையாய் கவனிக்கவும், வடதிசை ராஜாவாகிய அவனைக் கவனிக்கவும்" **(Watch Russia, Watch Russia, Keep your eye on the King of the North)** என்ற சத்தத்தை அவர் கேட்டார். இந்தத் தரிசனமும் நிறைவேறிவிட்டது. முசோலினியின் பாஸீஸமும், ஹிட்லரின் நாஸீஸமும் மறைந்து ஸ்டாலினின் **(Stalin)** கம்யூனிஸமே நிலைத்திருக்கிறது. அந்தச் சத்தம், சோவியத் யூனியனைக் **(Soviet Union)** கவனித்துப்பார் என்று சொல்லாமல், ரஷ்யாவைக் **(Russia)** கவனித்துப்பார் என்று சொன்னது. இப்பொழுது ரஷ்யா, சோவியத் யூனியன் அன்று அழைக்கப்படாமல், ரஷ்யா என்று அழைக்கப்படுவது குறிப்பிடதக்கது.

முதல் மூன்று தரிசனங்களில், இரண்டு உலக யுத்தங்களும் அடங்கியிருக்கிறது. இப்பொழுது, ரஷ்யாவில் கம்யூனிஸம் இருக்கிறது. இதெல்லாம் அரசியல் சம்மந்தமான காலத்தைக் **(Political Realm)** குறிக்கிறது. இந்தியாவின் அரசியலை நாம் பார்கிறோம். அரசியல் பேசுவது தவறா? அது தவறில்லை. அரசியல்வாதியாகத்தான் மாறக்கூடாது. சபையில் இருக்கும் யாரும் அரசியல் உறுப்பினராக இருக்கக்கூடாது. எந்தக் கட்சியிலும் உறுப்பினராக இருக்கக்கூடாது. ஆனால், நம்முடைய நாட்டு நிலைமை நமக்குத் தெரியவேண்டும். உலகத்தைப்பற்றியும் நமக்குத் தெரியவேண்டும். அமெரிக்கா எப்படி இருக்கிறதென்றும், ரஷ்யா எப்படி இருக்கிறதென்றும் நமக்குத் தெரியவேண்டும். அதெல்லாம் ஒரு அடையாளமாக இருக்கிறது. சகோ. பிரன்ஹாம் அரசியலில் என்ன நடக்கும் என்று 1933ல், நடப்பதற்கு முன்னமே சொன்னார். அதைப்போலவே, சரியாக நடந்துவிட்டது. சில பெந்தெகொஸ்தே போதகர்கள் தீர்க்கதரிசம் உரைப்பார்கள். சகோ. தினகரன் அவர்கள் சகோ. ஷ்யாம் சுந்தரம் சபையில் ஒவ்வொரு வருடமும் போய்த் தீர்க்கதரிசனம் உரைப்பார். ஒன்றும் நிறைவேறாது. எல்லாம் தலைகீழாக இருக்கும். அவர்களெல்லாம் தீர்க்கதரிசி கிடையாது. அவர்கள் தங்களைத் தீர்க்கதரிசி என்று உயர்த்திக்கொள்வார்கள். ஆனால், சகோ. பிரன்ஹாம் உரைத்தத் தரிசனம் சரியாக நிறைவேறுகிறது. அல்லேலூயா. தரிசனம் பார்க்கிறார், அதை உரைக்கிறார், அது நிறைவேறுகிறது. அல்லேலூயா.

**<u>நான்காம் தரிசனம்</u>:** இந்தத் தரிசனம், இரண்டாம் உலக யுத்தத்திற்குப் பிறகு, விஞ்ஞானத்தில் ஏற்படவிருந்த முன்னேற்றத்தைக் **(Technological Advances)** காண்பித்தது. அரசியலில் இருந்து கர்த்தர் விஞ்ஞானத்திற்குக் கொண்டுசெல்லுகிறார். முட்டை வடிவத்தில் கார் **(Egg shaped car)** இருக்கிறது. யாரும் ஓட்டாமலேயே தொலைக்கட்டுப்பாட்டினால் **(Remote Control)** இயக்கப்படுகிறது. வண்டியில் இருந்தவர்கள், ஏதோ ஒரு விளையாட்டில் மூழ்கியிருந்தனர். இன்றைக்கு, அவ்விதமான காரை கண்டுபிடித்தாயிற்று. நம்முடைய பிரதமரும்கூட அதில் பிரயானம்பண்ணிவிட்டு வந்திருக்கிறார்.

விஞ்ஞானம் அதிகமாக முன்னேறியிருக்கிறது. அது நாலாம் பரிமாணமாய் **(Fourth Dimension)** இருக்கிறது. மனுஷன் நாலாம் பரிமாணத்தைக் கண்டுபிடித்துவிட்டான். நாம் ஒளி, பொருள், நேரம் **(Light, Matter, Time)** என்ற மூன்று பரிமாணங்களில் இருக்கிறோம். இரண்டாம்

உலக யுத்தம் வரைக்கும் அந்த நாலாம் பரிமாணத்தைக் கண்டுபிடிக்கவில்லை. ஆனால், அதற்குப்பின்பு, தொலைக்காட்சி, இன்னும் பல அறிவியல் சாதனங்கள் கண்டுபிடிக்கப்பட்டது. இன்றைக்கு அலைபேசி **(Cell Phone)** இருக்கிறது. இணையம் **(Internet)** இல்லாமல் எந்தக் காரியத்தையும் செய்யமுடியாது. எல்லாமே கணினிமயமாக்கப்பட்டிருக்கிறது **(Computerized)**. சகோ. பிரன்ஹாம் இதெல்லாம் வருவதற்கு முன்னமே சொல்லிவிட்டார். நாலாம் பரிமாணமானது, தொலைக்காட்சியாக **(Television)** இருக்கிறது. அது இன்றைக்குப் பாதாளத்தை பூமியில் கொண்டுவந்துவிட்டது **(Bringing hell back to earth)**. வாலிபர்களும், சிறு பிள்ளைகளும் இணையதளங்களில் **(Websites)** பல காரியங்களைப் பார்த்துக்கொண்டே இருப்பார்கள். என்ன காலம் இது? பாதளத்தில் இருக்கும் பிசாசின் ஆவிகள் வந்திருக்கிறது. பிள்ளைகள் கேலிச்சித்திரங்களைப் **(Cartoons)** பார்த்துக்கொண்டே இருந்தால், அது பிசாசின் ஆவிதான். எப்பொழுதும் காணொளி ஆட்டங்களை **(Video Games)** விளையாடிக்கொண்டேயிருந்தால், அது பிசாசின் ஆவிதான். பாதாளம் திறக்கப்பட்டதால் அப்படி ஆகியிருக்கிறது. சகோ. பிரன்ஹாம் முன்கூட்டியே சொல்லிவிட்டார். உலகம் இன்றைக்குப் பாதாளமாக இருக்கிறது. அந்த இணையதளங்களில்தான் எல்லாக் காட்சிகளும், சகல அசுத்தங்களும் இருக்கிறது. இது பைத்தியமுள்ள காலமாக **(Insane Age)** இருக்கிறது. ஜனங்களுக்குப் பைத்தியம் பிடித்திருக்கிறது.

**<u>ஐந்தாம் தரிசனம்</u>:** பெண்களின் ஒழுக்கம் கெட்டுப்போகிறது. பெண்கள் தங்கள் உடைகளை அதிகமாகக் குறைத்துக்கொள்ளுகிறார்கள். உடைகள் அத்தியிலைகளைப்போல் மாறியிருக்கிறது. இன்றைக்கு, அப்படித்தான் இருக்கிறது. ஜனங்கள் நவ நாகரீகமாக **(Fashion)** இருக்கிறார்கள். முதலில் அரசியல், இரண்டாவது விஞ்ஞானம் அதன்பின்பு பெண்களின் ஒழுக்கமின்மை. இரண்டாம் உலக யுத்தத்திற்குப் பின்பு, விஞ்ஞானத்தின் மூலமாக ஒழுக்கமுள்ள வாழ்க்கை **(Moral Life)** கெட்டுப்போகிறது. இந்த இணையதளங்கள் வந்தபின்புதான் ஒழுக்கம் கெட்டுப்போனது. செய்தியில் உண்மையாய் இல்லாத அத்தனைப்பேரும் வீழ்ச்சியடந்துவிட்டார்கள். உலகமே இன்றைக்குப் பாவத்தில் போய்விட்டது. உலக யுத்தம் வரவில்லை என்றால் இவ்விதமான கண்டுபிடிப்புகள் வந்திருக்காது. ஜப்பானில் அணுகுண்டு போட்டதால், “எப்படி நாம் முன்னேற வேண்டும்,

நம்முடைய நாட்டை முன்னேற்றத்தில் எப்படிக் கொண்டுவரவேண்டும்" என்று விஞ்ஞானக் கண்டுபிடிப்புகளைக் கொண்டுவந்தார்கள். ஆனால் விஞ்ஞானத்தில் மூலமாக ஒழுக்கம் கெட்டுப்போனது. அதுதான் ஐந்தாவது தரிசனம்.

**ஆறாம் தரிசனம்:** மிகவும் அழகான ஒரு பெண் அமெரிக்காவில் தோன்றினாள். அவள் அழகில் சிறந்தவளாக இருந்தாலும், மிகவும் கொடூரமான குணம் படைத்தவளாக இருந்தாள். கத்தோலிக்க மார்க்கம் அமெரிக்காவில் வளர்ந்து ஆதிக்கம் பெறுவதை இது குறிக்கிறது. ரஷ்யா தங்களுக்கு விரோதமாக வரும் என்று அமெரிக்கா பயந்துகொண்டிருக்கும்போது, சகோ. பிரன்ஹாம், "நீங்கள் பயப்படவேண்டியது சிவப்புத் திரைக்குத்தான் **(Purple Curtain)**" என்றார். ரஷ்யா இரும்புத் திரையாக **(Iron Curtain)** இருக்கிறது. கத்தோலிக்க மார்க்கம் சிவப்புத் திரையாக இருக்கிறது. கத்தோலிக்க மார்க்கம் அங்கே வந்தது.

கத்தோலிக்க மார்க்கத்தைச் சேர்ந்த கென்னடி அங்கே ஜனாதிபதியாக வந்தார். அமெரிக்கா ஒரு பிராட்டஸ்டென்ட் **(Protestant)** நாடு. கத்தோலிக்க மக்கள் அங்கே அதிகமாக வந்துவிட்டார்கள். முதலில், விஞ்ஞானக் கண்டுபிடிப்புகள் **(Discovery of Science after World War II)**, பின்பு பெண்களின் ஒழுக்கமின்மை **(Decay of Moral Life)**, அதன்பின்பு யேசபேல் மார்க்கம் **(Jezebel System)**. கத்தோலிக்க மார்க்கம் அமெரிக்காவை படையெடுத்தது **(Invasion of Roman Catholics)**. மெக்சிகோ **(Mexico)** நாடு முழுவதும் கத்தோலிக்க மார்க்கந்தான். கத்தோலிக்க மார்க்கம் வளர்ந்து எல்லாம் ஒன்றிணைக்கப்படுவதுதான் ஆறாம் தரிசனம் **(The rise of Catholic Church, the Ecumenical Move)**.

**ஏழாவது தரிசனம்:** சகோ. பிரன்ஹாம் மிகப்பெரிய வெடிச்சத்தத்தைக் கேட்டார். அவர் திரும்பிப் பார்த்தபோது, அமெரிக்கா அங்கே இல்லை. அது, முழுவதும் புகைக்காடாகவும் இடிபாடுகளாகவும் காணப்பட்டது. ரஷ்யா அமெரிக்கா மீது அணுகுண்டை **(Atom Bomb)** போடும். அப்பொழுது அமெரிக்கா முற்றிலும் அழிந்துபோகும். அல்லேலூயா. **(Total annihilation as far as the eyes can see, under that Seventh Vision)** ஏழாவது தரிசனம், அமெரிக்காவின் அழிவாக இருக்கிறது **(Destruction of America)**.

முதலாம் உலக யுத்தமும், இரண்டாம் உலக யுத்தமும் வந்தது. இரண்டாம் உலக யுத்தத்திலிருந்து, மூன்றாம் உலக யுத்தம் வரைக்கும் என்ன நடக்கும் என்பதுதான் ஏழு தரிசனங்கள். இரண்டாம் உலக யுத்தத்திற்குப்பின்பு என்ன நடக்கும்? முசோலினி சாவான். ஹிட்லர் சாவான். கம்யூனிஸம் உலகத்தில் வல்லமையுள்ளதாக மாறும். ஜனங்களின் ஒழுக்கம் கெட்டுப்போகும். கத்தோலிக்க மார்க்கமானது அமெரிக்காவை மேற்கொள்ளும். கடைசியாக, அமெரிக்கா அழியும். இதெல்லாம் இரண்டாம் உலக யுத்தத்திற்கும், மூன்றாம் உலக யுத்தம் யுத்தத்திற்கும் மத்தியில் நடக்கிற காரியங்கள். இரண்டாம் உலக யுத்தம் என்னது? அது ஆறாம் எக்காளமாக இருக்கிறது. ஆறாம் எக்காளம் எது? அது பாவநிவிர்த்தி பண்டிகையாக இருக்கிறது. ஏழாம் எக்காளம் ஆயிரவருட அரசாட்சியாக இருக்கிறது. இரண்டுக்கும் மத்தியில் நாம் இப்பொழுது இருக்கிறோம். அல்லேலூயா. அந்த அமைதல் **(Silence)** என்ன? கர்த்தருடைய வருகையைப்பற்றி அங்கே சொல்லப்படவில்லை. இஸ்ரவேல் ஜனங்கள் கர்த்தரை அறிந்துகொள்வதற்கு முன்னதாக நாம் மேலே எடுத்துக்கொள்ளப்படவேண்டும். ஆமென்.

"ஐபிராத்தென்னும் பெரிய நதியண்டையிலே கட்டப்பட்டிருக்கிற நான்கு தூதர்களையும் அவிழ்த்துவிடு" என்று எழுதியிருக்கிறது. ஹிட்லர், முசோலினி, ஸ்டாலின், எய்க்மேன் **(Hitler, Mussolini, Stalin, Eichmann)** என்ற நான்கு தூதர்களும் அவிழ்த்துவிடப்பட்டார்கள். அது யூத ஜனங்கள்மேல் வந்தது. பாதாளம் திறக்கப்பட்டு, இருபது கோடி பிசாசின் ஆவிகள் வந்திருக்கிறது. நாம் அவைகளால் வஞ்சிக்கப்படக்கூடாது. சகோ. பிரன்ஹாம் அதற்கு விரோதமாக பேசத் துவங்கினார். விஞ்ஞானத்திற்கு விரோதமாக பேச ஆரம்பித்தார். ஜனங்களுடைய ஒழுக்கமின்மையைக் குறித்துப் பேச ஆரம்பித்தார். பெண்களுக்கு விரோதமாக பேச ஆரம்பித்தார். அவர் அமெரிக்காவுக்கு விரோதமாக பேச ஆரம்பித்தார். கத்தோலிக்க மார்க்கத்துக்கு விரோதமாக பேச ஆரம்பித்தார். இந்த தரிசனங்களைப் பார்த்ததால்தான் அவர் பேச ஆரம்பித்தார்.

நீங்கள் கவனிக்கும்பொழுது, முசோலினி பாஸீஸத்தைப்பற்றிப் பேசிக்கொண்டிருக்கும்போது, ஹிட்லர் நாஸீஸத்தைப்பற்றிப் பேசிக்கொண்டிருக்கும்போது, ஸ்டாலின் கம்யூனிஸத்தைக்குறித்துப் பேசிக்கொண்டிருக்கும்போது, சகோ. பிரன்ஹாம் என்ன பேசிக்கொண்டிருக்கிறார்? கர்த்தராகிய இயேசுவின் நாமத்தில்

ஞானஸ்நானம் எடுப்பதைக்குறித்துப் பேசிக்கொண்டிருக்கிறார். அல்லேலூயா. 1933ம் வருஷம், அவர் ஞானஸ்நானம் கொடுக்கும்போது, உலகத்தில் ஒரு பக்கம் இவ்விதமான போதனைகள் நடந்துகொண்டிருக்கும்போது, அவர் கர்த்தருடைய வார்த்தையைப் பேசிக்கொண்டிருக்கிறார். இங்கே நாம் பார்க்கும்போது, இந்தக் கட்சிக்கு வாருங்கள், அந்த கட்சிக்கு வாருங்கள், அரசியலில் வாருங்கள் என்று சொல்லி, செய்தியில் இருக்கிறவர்கள்கூட அரசியலில் போய் சேருகிறார்கள். அது மிகவும் கேவலமான ஒரு நிலை. நாம் இன்றைக்கு, தேவனுடைய வார்த்தையைப் **(Word of God)** பேசுகிறோம். அல்லேலூயா. மணவாட்டியாகிய நாம் இப்பொழுது ஏழு எக்காளங்களைப்பற்றிப் பேசிக்கொண்டிருக்கிறோம். அந்த நேரத்திலே, உலகத்தில் இவ்வளவு சத்தங்கள் இருக்கும்போது, இவ்வளவு கொள்கைகள் இருக்கும்போது, சகோ. பிரன்ஹாம் வார்த்தையைப்பற்றிப் பேசுகிறார். அவர்கள் தங்கள் பக்கமாக ஜனங்களை இழுக்கவேண்டும் என்பதற்காக பிரசாரம்பண்ணினார்கள். இன்றைக்கு உலகத்தில் எத்தனைப் பிரசாரம் நடந்துகொண்டிருக்கிறது! நாம் தேவனுடைய வார்த்தையைப்பற்றிப் பேசிக்கொண்டிருக்கிறோம். அல்லேலூயா. “நீ உபத்திரவகாலத்தில் **(Period of Tribulation)** சிக்கிக்கொள்ளாதே, அர்மகெதோன் **(Armageddon)** யுத்தத்தில்போய் மாட்டிக்கொள்ளாதே, நீ வெள்ளை சிங்காசனத்திற்கு **(White Throne Judgment)** முன்பாக வராதே, நீ எடுத்துக்கொள்ளப்படுதலில் **(Rapture)** பங்குபெறு” என்று நாம் சொல்லிக்கொண்டிருக்கிறோம். அல்லேலூயா. சகோ. பிரன்ஹாமுடைய செய்தி மணவாட்டியை ஆயத்தப்படுத்துகிறதாய் இருக்கிறது. அல்லேலூயா.

மூன்றாம் உலக யுத்தமானது, பூமியைக் கெடுத்தவர்களைக் கெடுப்பதற்காக வருகிறது. விஞ்ஞானிகள் பூமியைக் கெடுத்துப்போட்டார்கள். அதன் மூலமாக ஏற்பட்ட உலகத்தின் வேஷம் **(Fashion)** ஒழுக்கத்தைக் கெடுத்துவிட்டது. அரசியல்வாதிகள் பூமியைக் கெடுத்துப்போட்டார்கள். கத்தோலிக்க மார்க்கம், ஜனங்களுடைய விசுவாசத்தைக் கெடுத்துவிட்டது. எல்லாமே பூமியைக் கெடுத்துப்போட்டது. எல்லாவிதமான சக்திகளும், எல்லாவிதமான கொள்கைகளும் பூமியைக் கெடுத்துப்போட்டதால், எல்லாவற்றையும் அழிப்பதற்காக ஆண்டவர் அந்த அர்மகெதோன் யுத்தத்தை வைத்திருக்கிறார். ஆண்டவர் கத்தோலிக்க மார்க்கத்தை அழிப்பதற்காக ரஷ்யாவை வைத்திருக்கிறார். ஒரு மணி

நேரத்தில் அது அழிந்துபோகும். அதுமாத்திரமல்ல, ரஷ்யா அமெரிக்காவையும் அழித்துப்போடும் என்று சகோ. பிரன்ஹாம் சொல்லியிருக்கிறார். அல்லேலூயா. சகோ. பிரன்ஹாம் அதற்கு விரோதமாகப் பேசினார்.

இந்தச் செய்தி தெரிந்துகொள்ளப்பட்டவர்களைக் **(Elected People)** கொண்டுவருகிறது. அல்லேலூயா. ஆஸ்நாத்தை அது அரண்மனைக்குப் போகவைக்கிறது. அல்லேலூயா. ரூத்தை போவாசுடன் இணைக்கிறது. இதோ, அதற்காகத்தான் ஆண்டவர் ஒரு தீர்க்கதரிசியை அனுப்பினார். நீங்கள் கேட்கும் செய்தி உங்களை அரண்மனைக்குப்போக வைக்கிறது. “நான் என் சகோதரர்களுக்கு என்னை வெளிப்படுத்தவேண்டும். நீ மேலே போய்விடு” என்று ஆண்டவர் சொல்லுகிறார். அல்லேலூயா. “நகோமியைப் பார்த்து, நான் உன்னோடு இப்பொழுது பேசமுடியாது, நீ வீட்டிற்குள்ளேயே இரு. நான் ரூத்தோடு ஐக்கியப்படவேண்டும்” என்று சொல்லுகிறார். அல்லேலூயா. இன்றைக்கு அந்த நேரத்திலே நாம் இருக்கிறோம். ஐந்தாம் எக்காளத்துக்கும் ஆறாம் எக்காளத்துக்கும் மத்தியில் நாம் இருக்கிறோம். ஆறாம் எக்காளம், பாவநிவிர்த்தி பண்டிகையாக இருக்கிறது. ஏழாம் எக்காளம், கூடாரப்பண்டிகையாக இருக்கிறது. அது ஆயிரவருட அரசாட்சியைக் குறிக்கிறது. அல்லேலூயா. ஆண்டவர் நமக்கு ஒரு அபிஷேகத்தைக் கொடுத்திருக்கிறார். அவர் தம்முடைய வார்த்தையை அபிஷேகம்பண்ணி அனுப்புகிறார்.

முசோலினிக்கு பாஸீஸத்தின் ஆவி, ஹிட்லருக்கு நாஸீஸத்தின் ஆவி, ஸ்டாலினுக்கு கம்யூனிஸத்தின் ஆவி இருந்தது. சகோ. பிரன்ஹாமுக்கு, தேவனுடைய பரிசுத்த ஆவி வந்து, வார்த்தையைப் பேசினார். அல்லேலூயா. இன்றைக்கு எத்தனை ஆவிகள் இருக்கிறது! அரசியல் ஒரு அசுத்த ஆவியாக இருக்கிறது. அது ஜனங்களைப் பிடித்துக்கொள்ளும். நாம் பரிசுத்த ஆவியால் அபிஷேகம் பண்ணப்பட்டிருக்கிறோம். அல்லேலூயா. தேவனுடைய வார்த்தை மிகவும் உண்மையானதாக இருக்கிறது **(God’s Word is so real)**. அவர் தம்முடைய வார்த்தையை அபிஷேகம்பண்ணி, நமக்கு அதை மிகவும் உண்மையானதாக்குகிறார் **(He anoints His Word, making it so real unto us that we can see where we are)**. கர்த்தருடைய வார்த்தை எவ்வளவு உண்மையாக இருக்கிறது, அது எப்படி சரியாக நிறைவேறிக்கொண்டிருக்கிறது, நாம் எங்கே இருக்கிறோம் என்பதை நாம்

பெற்ற அபிஷேகம் நமக்குக் காண்பிக்கிறது. அல்லேலூயா. என்ன நடக்கப்போகிறதென்பதையும் நமக்குக் காண்பிக்கிறது. ஆமென்.

பிணம் எங்கேயோ அங்கே கழுகுகள் வந்து கூடும் என்று இயேசு சொன்னார் **(**மத்தேயு 24: 28**)**. இது கழுகின் காலமாக **(Eagle's Time)** இருக்கிறது. கழுகு புதிய மாம்சத்தைத்தான் **(Fresh Meat)**. புசிக்கும். செத்துப்போனதைச் சாப்பிடாது. வார்த்தைத் திறக்கப்பட்டு **(Opening of the Word)**, இந்தச் செய்தி நமக்கு புதிய மாம்சத்தைக் கொண்டுவருகிறது. அதைச் சுற்றிலும் கழுகுகள் வருகிறது. அல்லேலூயா. உலகத்தில் பல சத்தங்கள் இருக்கிறது. இதோ, நம்மை ஒரு சத்தம் இழுத்திருக்கிறது. அல்லேலூயா. கர்த்தருடைய வார்த்தைத் திறக்கப்படுகிறது. நாம் அதைச் சுற்றிலும் ஐக்கியப்பட்டுக்கொண்டிருக்கிறோம். ஆமென்.

ஆஸ்நாத்துக்கும் யோசேப்புக்கும் அங்கே இணைப்பு ஏற்பட்டது. ரூத்துக்கும் போவாசுக்கும் அங்கே இணப்ப்பு ஏற்பட்டது. இப்பொழுது நாம் விவாக ஐக்கியத்தில் **(Marriage Union)** இருக்கிறோம். அது இப்பொழுது இங்கே நடந்துகொண்டிருக்கிறது **(Something happening right here)**. ஆமென்.

இயேசுகிறிஸ்து சொல்லுகிறார், "இரண்டுபேர் வயலில் இருப்பார்கள்; ஒருவன் ஏற்றுக்கொள்ளப்படுவான், ஒருவன் கைவிடப்படுவான்".

**மத்தேயு 24: 40, 41**

40. அப்பொழுது, இரண்டுபேர் வயலில் இருப்பார்கள்; ஒருவன் ஏற்றுக்கொள்ளப்படுவான், ஒருவன் கைவிடப்படுவான்.
41. இரண்டு ஸ்திரீகள் ஏந்திரம் அரைத்துக்கொண்டிருப்பார்கள்; ஒருத்தி ஏற்றுக்கொள்ளப்படுவாள், ஒருத்தி கைவிடப்படுவாள்.

அது நடக்கவேண்டிய நேரம் இது. இரண்டுபேர் ஊழியம் **(**வயல்**)** செய்வார்கள். இரண்டு சபைகள் **(**ஸ்திரீகள்**)** செய்தியில் இருக்கும். ஏந்திரம் அரைப்பது, செய்தியை ஆயத்தமாக்குவதைக் **(Preparing the Message)** குறிக்கிறது. ஒருவன் ஏற்றுக்கொள்ளப்படுகிறான். ஒருவன் கைவிடப்படுகிறான். கர்த்தராகிய இயேசுகிறிஸ்து, மத்தேயு 24ம் அதிகாரத்தில் சொல்லியிருக்கிறார். ஏழு முத்திரைகள், ஏழு எக்காளங்கள், மணவாட்டி, எடுத்துக்கொள்ளப்படுதல் போன்ற எல்லாவற்றையும் சொல்லிவிட்டார்.

நோவா காலம் **(Noah's Days)** விஞ்ஞானத்தைக் குறிக்கிறது. அது நாலாவது தரிசனம். சகோ. பிரன்ஹாம் நாலாவது தரிசனத்தைப் பார்க்கும்போது, நோவா காலத்தைப் பார்க்கிறார். அதன்பின்பு, சோதோம் கொமோராவில் மோசமான ஜனங்கள் இருந்தார்கள். பேலியாளின் மக்கள் இருந்தார்கள். இன்றைக்கு அவ்விதமான மக்கள் **(LGBT People)** உலகமெங்கும் இருக்கிறார்கள். அவர்கள் எங்களுக்கும் உரிமை வேண்டும் என்று சொல்லுகிறார்கள். அதுதான் லோத்தின் காலம் **(Lot's Days)**. அது ஐந்தாவது தரிசனம். சகோ. பிரன்ஹாம் ஐந்தாவது தரிசனத்தில் ஜனங்களின் ஒழுக்கம் மிகவும் கெட்டுப்போகிறதைப் **(Decay of Moral Life)** பார்க்கிறார். இது அவ்விதமான ஒரு காலம். சுபாவத்துக்கு விரோதமாக நடந்துகொள்ளும் மிகவும் கேவலமான ஒரு காலம். அருவருப்பான காலம். சோதோமின் நாட்கள் வந்திருக்கிறது. ஆறாவது தரிசனம், கத்தோலிக்க மார்க்கத்தைக் குறிக்கிறது. பெண் அங்கே வருவாள் என்று சொல்லியிருக்கிறது. இப்பொழுதும் பெண் அங்கே இருக்கிறாள். நவம்பர் மாதம் தேர்தல் நடக்கும்போது நமக்குத் தெரியும். இதுவரைக்கும் அமெரிக்காவில் ஒரு பெண் ஜனாதிபதி வரவில்லை. அது கத்தோலிக்க மார்க்கமாகவும் இருக்கலாம், அல்லது பெண் ஜனாதிபதியாகவும் இருக்கலாம். இரண்டும் சேர்ந்தும் இருக்கலாம். நான் இரண்டும் சேர்ந்து இருக்கலாம் என்று நம்புகிறேன். அதன்பின்பு முற்றிலுமான அழிவு **(Total Annihilation)**.

நாம் எங்கே இருக்கிறோம் என்று சிந்தித்துப் பாருங்கள். நினைப்பதைக் காட்டிலும் காலமானது மிகவும் சமீபமாய் இருக்கிறது. அல்லேலூயா. மத்தேயு 24: 28ல் இயேசுகிறிஸ்து, "பிணம் எங்கேயோ அங்கே கழுகுகள் வந்து கூடும்" **(Where there is fresh meat, there the enagles will gather together)** என்று சொல்லுகிறார். இதுதான் மனுஷகுமாரன் வெளிப்படுவது **(Son of Man revealed)**. நாம் மனுஷகுமாரனுடைய மாறாத சரீர வார்த்தையினால் போஷிக்கப்படுகிறோம் **(We are feeding on the unfailing Body Word of the Son of Man)**. அல்லேலூயா. நாம் இப்பொழுது அங்கே இருக்கிறோம். நீங்கள் கழுகுகளாய் இருக்கிறீர்கள். புதிய மாம்சம் இங்கே இருக்கிறது. இங்கே இன்று எதற்காக வந்திருக்கிறீர்கள்? இவ்வளவு நேரம் ஏன் பிரசங்கத்தைக் கேட்டுக்கொண்டிருக்கிறீர்கள்? ஏனென்றால் நாம் புதிய மாம்சத்தைச் சாப்பிட்டுக்கொண்டிருக்கிறோம். அல்லேலூயா.

மனுஷகுமாரனுடைய ஊழியம் **(Son of Man Ministry)** நமக்கு வந்திருக்கிறது. வெளிப்படுத்தப்பட்ட வார்த்தை **(Revealed Word)** நம் மத்தியில் வந்திருக்கிறது. நாம் அதைச் சுற்றிலும் ஐக்கியப்பட்டிருக்கிறோம்.

கவனிக்கவேண்டிய காரியம் என்னவென்றால், நம்முடைய ஆத்துமா கெட்டுப்போனால் நாம் கணக்கு ஒப்புவிக்கவேண்டும். அது உங்களைப் பொருத்தது. இந்த ஊழியத்திற்கு யாரும் இடறலாய் வரக்கூடாது. ஊழியம் முக்கியமானது. இங்கே புதிய மாம்சம் இருக்கிறது. செய்தி இருக்கிறது. இந்தச் செய்தி தூஷிக்கப்படக்கூடாது. கடைசி நேரத்தில் வந்திருக்கிறோம். நாம் மிகவும் ஜாக்கிரதையாய் இருக்கவேண்டும். தரிசனங்கள் சொல்லுகிறது, முத்திரைகள் சொல்லுகிறது, எக்காளங்கள் சொல்லுகிறது, மத்தேயு எழுதின சுவிஷேசம் சொல்லுகிறது, வெளிப்படுத்தின விசேஷம் சொல்லுகிறது, யோசேப்பின் சரித்திரம் சொல்லுகிறது, ரூத்தின் சரித்திரம் சொல்லுகிறது, எல்லாமே இந்த நேரத்தைக் குறிக்கிறது. தேவன் ஒரு ஜனத்தை ஆயத்தப்படுத்திக்கொண்டிருக்கிறார் **(God is preparing a People)**. எதற்காக? எடுத்துக்கொள்ளப்படுதலுக்காக. அந்த ஜனங்கள் நீங்கள். நம்முடைய ஆத்துமாவும் சரியாக இருக்கவேண்டும், நம்முடைய ஊழியமும் சரியாக இருக்கவேண்டும். நம்முடைய ஆத்துமாவையும் நாம் தேவனுக்கு முன்பாக சரிப்படுத்தவேண்டும். இந்த ஊழியத்திலும் நாம் கர்த்தருக்கென்று எதாவது சேவைச் செய்யவேண்டும். அப்படி நாம் சேவைச் செய்யாவிட்டாலும் நாம் இடறலாயிருக்கக்கூடாது.

மனுஷகுமாரன் வெளிப்பட்டிருக்கிறார். இது ஆஸ்நாத்தை மாளிகைக்கு அனுப்பவேண்டிய நேரம் **(Joseph's bride is getting ready to be dismissed to the palace)**. ரூத் இப்பொழுது கோதுமையால் போஷிக்கப்படுகிறாள் **(Nourishment being ministered to Ruth)**. மனுஷகுமாரனுடைய மாறாத சரீர வார்த்தையைப் புசித்துக்கொண்டிருக்கிறாள். அவள் போவாசுடன் ஒன்றாக இணைக்கப்படவேண்டிய நேரம் **(She has become one with Boaz)**. இந்தக் காலத்தைக் குறித்தும், இப்பொழுது மணவாட்டி எப்படி இருக்கவேண்டும் என்பதைக் குறித்தும், வேதாகமம் முழுவதும் சாட்சி **(testify)** கொடுக்கிறது. சகோ. பிரன்ஹாமின் ஏழு தரிசனங்கள் சாட்சி கொடுக்கிறது. அவருடைய வாழ்க்கை சாட்சி கொடுக்கிறது. எல்லாமே மிகச்சரியாக, தத்ரூபமாக இருக்கிறது. அல்லேலூயா. கர்த்தர் தாமே நம்மை ஆசீர்வதிப்பாராக. நாம் எல்லாரும் ஜெபிக்கலாம்.

கர்த்தருடைய வார்த்தையை நாம் அதிக நேரம் கேட்டிருக்கிறோம். கர்த்தர் நல்லவராய் இருக்கிறார். ஏழு எக்காளங்கள் என்றால் என்ன, ஏழு முத்திரைகள் என்றால் என்ன, ஏழு சபைக்காலங்கள் என்றால் என்ன, அது எப்படி நிழலாகவும் அடையாளமாகவும் **(Shadow & Type)** இருக்கிறது, சகோ. பிரன்ஹாமுடைய தரிசனங்களில் அது எவ்விதமாக வருகிறது, அவருடைய வாழ்க்கையில் அது எவ்விதமாக வருகிறது என்று பார்த்தோம். இரண்டாம் உலக யுத்தத்திற்கும் மூன்றாம் உலக யுத்தத்திற்கும் மத்தியிலே என்ன நடக்கிறது என்பதுதான் அந்த ஏழு தரிசனங்கள். நாம் இன்றைக்கு அதின் நிறைவேறுதலில் இருக்கிறோம். ஒரு ஜனத்தை ஆண்டவர் ஆயத்தப்படுத்துகிறார்.

சகோ. பிரன்ஹாமின் செய்தி அரசியலுக்கு விரோதமாக இருந்தது. முதல் மூன்று தரிசனங்கள் அரசியல் சம்மந்தமானது. நாலாவது விஞ்ஞானத்திற்கு விரோதமாக இருந்தது. விஞ்ஞானிகள் எல்லாம் பிசாசாய் இருக்கிறார்கள் என்று சொல்லுகிறார் **(Scientists are devils)**. அவருடைய செய்தி ஜனங்களின் மோசமான வாழ்க்கைக்கு **(Immoral Life)** விரோதமாக இருந்தது. அது கத்தோலிக்க மார்க்கத்துக்கும், அமெரிக்காவுக்கும் விரோதமாக இருந்தது. முற்றிலுமான அழிவு **(Total Annihilation)** வரப்போகிறது. மூன்றாம் உலக யுத்தம் வரப்போகிறது. வேதத்தில் சொல்லப்பட்டிருக்கும்போது, அது நிறைவேறாமல் போகாது. எந்த காரியங்களும் அதைத் தடுக்கமுடியாது. யாரும் அதை மாற்றமுடியாது.

ஆகையால் கர்த்தருக்கு நாம் ஸ்தோத்திரம் செலுத்துவோம். எல்லாரும் நாம் கர்த்தரை நோக்கி ஜெபிக்கலாம். "ஆண்டவரே, என்னை ஆயத்தப்படுத்தும், நான் உமக்கென்று ஒரு சேவை செய்ய எனக்கு நீர் கிருபை தாரும், நான் உம்முடைய சத்தமாக இருக்க உதவிசெய்யும், தீர்க்கதரிசனம் உரைக்க எனக்குக் கிருபை தாரும், என்னைக்குறித்து உம்முடைய தீர்மானம் என்ன, அதை நிறைவேற்றும்" என்று நாம் ஜெபிக்கலாம்.

எங்களை நேசிக்கிற நல்ல ஆண்டவரே, உம்மைத் துதிக்கிறோம். இந்நேரமட்டும் உம்முடைய வார்த்தையைத் தியானித்தோம். கர்த்தாவே, ஏழு எக்காளங்களைக் குறித்து வேதத்தில் என்ன எழுதப்பட்டிருக்கிறது என்று பார்த்தோம். அது லேவியராகமம் 23ம் அதிகாரத்தில் இருக்கிறது, அது யோசேப்பின் வாழ்க்கையில் இருக்கிறது, அது ரூத்தின் புஸ்தகத்தில்

இருக்கிறது, வெளிப்படுத்தல் 6ம் அதிகாரத்திலும், 8ம் அதிகாரத்திலும், 11ம் அதிகாரத்திலும், இவ்விதமாக நீர் அங்கேயும் இங்கேயும் எழுதிவைத்திருக்கிறீர். உம்முடைய மீட்பின் திட்டத்தை **(Plan of Redemption)** பலவிதமாக காண்பித்திருக்கிறீர். அதில் ஒரு பகுதி ஏழு சபைக்காலங்கள், இன்னொரு பகுதி ஏழு முத்திரைகள், இன்னொரு பகுதி ஏழு எக்காளங்கள், இன்னொரு பகுதி ஏழு கோபகலசங்கள் என்று இவ்விதமாக எழுதிவைத்து, இந்தக் கடைசிகாலத்தில் முத்திரைகளைத் திறந்து வெளிப்படுத்தியிருக்கிறீர். வேதத்தில் உள்ள முத்திரைகள் உடைக்கப்பட்டிருக்கிறது. வார்த்தையின்மேல் இருக்கிற முத்திரை உடைக்கப்பட்டு, நீர் அந்த மீட்பின் திட்டத்தை வெளிப்படுத்தியிருக்கிறீர். எங்கள் வாழ்க்கையில் இருக்கிற முத்திரைகளும் உடைக்கப்பட்டு, நாங்கள் அந்தச் சரியான இணையாக **(Matching Piece)** இருக்கத்தக்கதாக, எங்கள் வாழ்க்கையில் உம்முடைய வார்த்தை நிறைவேறத்தக்கதாக, ஒரு ஜனத்தை நீர் ஆயத்தம்பண்ணியிருப்பதற்காக உமக்கு ஸ்தோத்திரம். இந்த இடத்தில் நீர் ஒரு ஜனத்தை ஆயத்தம்பண்ணிக்கொண்டிருக்கிறீர்.

அநேக விளங்காத சத்தங்கள் எங்களை சூழ்ந்திருக்கிறது. அநேக குழப்பங்கள் இருக்கிறது. அநேக கள்ள உபதேசங்களும் இருக்கிறது. அரிசியல் ஆவியும் இருக்கிறது, மத ஆவியும் இருக்கிறது, பிசாசின் ஆவியும் இருக்கிறது. அதே நேரத்தில், பரிசுத்த ஆவியானவர் வார்த்தையை வெளிப்படுத்திக்கொண்டிருப்பதற்காக உமக்கு ஸ்தோத்திரம். ஒரு தீர்க்கதரிசியின் சத்தம், ஏழாம் தூதனுடைய சத்தம் தொனித்துக்கொண்டிருக்கும்போது, அதற்குக்கு கீழே மணவாட்டியின் சத்தம் தொனித்துக்கொண்டிருக்கும்போது, அது எங்களை பரிபூரணப்படுத்துவதற்காக உமக்கு ஸ்தோத்திரம். எங்களை நீர் ஆயத்தப்படுத்தும். வசனத்தைக் கேட்ட அனைவரையும் நீர் ஆசீர்வதியும்.

இந்தத் தீர்க்கதரிசன வசனங்களை வாசிக்கிறவனும், கேட்கிறவர்களும், இதில் எழுதியிருக்கிறவைகளைக் கைக்கொள்ளுகிறவர்களும் பாக்கியவான்கள். இப்பொழுது இந்த ஏழு எக்காளங்களின் வெளிப்பாட்டைக் கேட்ட உம்முடைய பிள்ளைகளின் வாழ்க்கையில் உள்ள ஜெபவிண்ணப்பங்களுக்கு பதில் அளிப்பீராக. உலக வாழ்க்கைக்குத் தேவையான நன்மைகளைத் தருவீராக. சரீர சுகத்தைத் தருவீராக. மருத்துவமனையில் இருக்கிற பிள்ளைகளுக்குச் சுகத்தைத் தாரும். எல்லாருக்கும் சுகத்தைத் தந்து ஆசீர்வதிக்கவேண்டும் என்று

ஜெபிக்கிறோம். கர்த்தாவே, எங்களுடைய ஜெபங்கள் பரலோகத்தை வந்து எட்டட்டும். பெரிய காரியங்களை எங்கள் மத்தியில் செய்வீராக. ஆசீர்வதியும். கர்த்தராகிய இயேசுவின் நாமத்தில் வேண்டிக்கொள்ளுகிறோம். ஆமென்.